பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 20 வெள்ளிக்கிழமை (04 - 08 - 2000) VALAMPURI ஒலி: 228

### புதிய அரசியல் சட்ட மூலம்!

# பாராளுமன்றில் நிறைவேறியபின் புலிகளுக்கு அனுப்பிவைப்பேன்!

## பாராளுமன்றத்தில் ஜனாதிபதி உரை

(கொழும்பு அலுவலக நிருபர்)

**உத்தேச அரசியல் அமைப்பு சீர்திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபின் அதனை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு முறையாக அனுப்பிவைப்பேன்.**

**தற்போதைய சூழ்நிலையில் நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கு சர்வ மதத் தலைவர்களின் ஆசியையும் ஆதரவையும் எதிர்பார்க்கிறேன்.**

**இந்நாட்டில் வாழ்கின்ற பெரும்பான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற அதேவேளை சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண வேண்டும்.**

இவ்வாறு அமைச்சர் ஜி. எல்.பீரிஸினால் அரசியல் அமைப்புச் சீர்திருத்தச் சட்ட மூலம் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து அது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உரையாற்றும் போது கூறினார்.

சட்ட மூலம் சமர்ப்பிப்பதற்கு முன்னதாக ஜனாதிபதி ஹெலிகொப்டர் மூலம் கோட்டை ஸ்ரீஜெயவர்த்தனபுர பாராளுமன்றத்திற்கு வந்து சேர்ந்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

உத்தேச அரசியல் அமைப்புச் சீர் திருத்தங்கள் தொடர்பாக 1995 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய தேசியக கட்சியுடனும் ஏனைய அரசியல் கட்சிகளுடனும்பேசிவருகின்றேன். அப்போது ஐக்கிய தேசிக் கட்சி முன்வைத்த தீர்வு யோசனைகள் பல இத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

இந் நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நடவடிக்கைகள் பொறுப்பு வாய்ந்த ஒரு எதிர்க்கட்சி செய்யக்

[8ஆம் பக்கம் பார்க்க]

## யாழ்கடற்படைத் தளபதி அமரவீர பதவி நீக்கம்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டின் கடற்படைத் தளபதியாக ரியல் அட்மிரல் டபிள்யூ கே.ஜே. கருணாகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

இது வரை தளபதியாக இருந்த அட்மிரல் எஸ். ஆர். அமரவீர பதவி நீக்கம் செய்யப்பட்டதுடன் கடற்படைக் கட்டளை அதிகாரியான கொமடோர் வீரசேகரா இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் எனவும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே வேளை லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியா ஓய்வுபெற உள்ளதை அடுத்து அப்பதவிக்கு மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல நியமிக்கப்பட உள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சீர்திருத்த மசோதாவை எதிர்த்து சிங்கள அமைப்புக்கள் ஊர்வலம்

(கொழும்பு)

நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் சீர்திருத்த நகல் மசோதாவை எதிர்த்து சிங்களப் பேரினவாத அமைப்புக்களும் பிக்குமாரும் இணைந்து நேற்றுக் காலை புறக்கோட்டையில் ஊர்வலம் ஒன்றையும், சத்தியாக்கிரகம் ஒன்றையும் நடத்தியுள்ளார்கள்.

புகையிரத வீதியூடாக ஊர்வலமாக வந்த ஆர்ப்பாட்டக்காரர் ராஜகிரியவிலுள்ள விகாரை ஒன்றில் சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டிருந்தனர். இதில் சுமார் 200 க்கும் அதிகமான புத்த பிக்குமார் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

### தீர்வுக்கு எதிர்ப்பு- பாராளுமன்றில்

## ஐ. தே. கட்சியினர் வெறியாட்டம் சட்டமூலநகல் பிரதிகளை எரித்தனர்

(கொழும்பு)

புதிய அரசியல் யாப்பு சட்டமூலம் தொடர்பாக ஜனாதிபதி பாராளுமன்றத் ... ஐக்கிய தேசியக்கட்சியினர் மேசைகளில் தட்டியும் கூச்சல் போட்டும் குழப்பிய வண்ணம் இருந்தனர்.

... நாட்டும் வகையில் எடுத்த முயற்சிகள் எவையும் பயனளிக்கவில்லை.

ஐக்கிய தேசியக்கட்சி எம்.

## பொது ஜ. ஐ. முன்னணியில் இரண்டு புதிய எம். பிக்கள்

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன் ...

காலஞ்சென்ற அமைச்சர்

(கொழும்பு)

புதிய அரசியல் யாப்பு சட்டமூலம் தொடர்பாக ஜனாதிபதி பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியினர் மேசைகளில் தட்டியும் கூச்சல் போட்டும் குழப்பிய வண்ணம் இருந்தனர்.

இதன் போது சபாநாயகர் சபையில் அமைதியை நிலை நாட்டும் வகையில் எடுத்த முயற்சிகள் எவையும் பயனளிக்கவில்லை.

ஐக்கிய தேசியக்கட்சி எம். பிக்கள் அரசியல்சட்ட திருத்த

[8ஆம் பக்கம் பார்க்க)

### சட்டமூல விவாதத்தில்

# ஐ.தே.கட்சி பங்குபற்றாது செயற்குழுக் கூட்டத்தில் முடிவு

(கொழும்பு)

உத்தேச அரசியல் அமைப்பு சீர்திருத்த சட்ட மூலத்தை எதிர்ப்பதென நேற்றுக்கூடிய ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் செயற்குழுக் கூட்டம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

அரசியல் சீர்திருத்த மசோதா பாராளுமன்றத்தில் விவாதத்திற்கெடுத்துக் கொள்ளப்படும் போது அவ்விவாதத்திலும் கலந்து கொள்வதில்லை எனத் தீர்மானித்துள்ளனர். (வ

# உத்தேச அரசியல் நகல் வரைபை ஆதரித்தும்- எதிர்த்தும் ஊர்வலம்

### வீதி எங்கும் பலத்த பாதுகாப்பு

[கொழும்பு]

அரசியல் அமைப்பு சீர்திருத்த சட்டநகலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், ஆதரவு தெரிவித்தும் நேற்று இருபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் பாராளுமன்றத்திற்கு அருகில் நடத்தப்பட்டன.

எதிர்ப்புத் தெரிவித்து ஜே. வி பி யினரால் திட்டமிட்டு நடாத்தப்பட்ட ஊர்வலம் ராஜகிரிய சந்தியில் இருந்து ஆரம்பமாகி பத்தரமுல்ல சுற்றுவட்டத்தருகே வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்த ஊர்வலத்தில் ஐயாயிரத்திற்கு மேற்பட்டோர் கலந்து

[8ஆம் பக்கம் பார்க்க)

# இரண்டு புதிய எம். பிக்கள்

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியல் எம்.பிக்கள் இருவரின் வெற்றிடங்களுக்கும் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர்கள் சோ. கணேசமூர்த்தி. தென் மாகாணத்தைச் சேர்ந்தஎஸ். ஹரிச்சந்திரா ஆகியஇருவரும் புதிதாக நியமனம் பெற்றுள்ளனர்.

காலஞ்சென்ற அமைச்சர் தர்மசிறிசேனநாயக்கா, வை. பி. சில்வா ஆகிய இருவரின் வெற்றிடங்களுக்கே இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக நியமிக்கப்பட்ட இரண்டு எம்.பிக்களும் செவ்வாய்க்கிழமை சத்தியப்பிரமாணம் செய்துகொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

### பாராளுமன்ற தேர்தல் களம்

# கூட்டணியில் போட்டியிட பெரும்புள்ளிகள் ஆர்வம்

எதிர் வரும் பொதுத் தேர்தலுக்கான ஆயத்தங்களில் வவுனியாவில் உள்ள தமிழ்க் கட்சிகள் முனைப்புடன் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா தமிழர் விடுதலைக்கூட்டணிசார்பில்போட்டியிடுவதற்கு பிரபல வர்த்தகப் பிரமுகர்கள், இளைப்பாறிய சிவில் சேவை அதிகாரிகள் விண்ணப்பித்துள்ளதாக கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை யாழ். மாவட்டத்திலும் தேர்தல் பணிகள் பல்வேறுவகைப்பட்ட அணுகுமுறைகள் மூலம் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# 'சிற்றிஔவ் றிங்கோ' கப்பல் 350பேருடன் செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை வரும்

[திருமலை]

திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்குமிடையில் 'சிற்றிஔவ் றிங்கோ' பயணிகள் கப்பல் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித்துணையுடன் சேவையில் ஈடுபடவிருக்கிறது.

(8ஆம் பக்கம்பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஆகஸ்ட் மாதம் 03 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடா நாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகிறது.

கோப்பாய்

| | |
|---|---|
| 128192 ஏ | 128192 பி |
| 143232 ஏ | 143232 பி |
| 144938 ஏ | 144938 பி |
| 144949 ஏ | 145255 ஏ |
| 145256 ஏ | 145256 பி |
| 145256 சி | 145418 ஏ |
| 145418 பி | 145444 ஏ |
| 145444 பி | 145516 ஏ |
| 147666 ஏ | 147666 பி |
| 147666 சி | 149777 ஏ |
| 149777 பி | 149781 ஏ |
| 149796 ஏ | 149911 ஏ |
| 150899 ஏ | 153154 ஏ |

நல்லூர்

| | |
|---|---|
| 144808 ஏ | 144808 பி |
| 144814 பி | 144815 ஏ |
| 144825 ஏ | 144826 ஏ |
| 144826 பி | 144826 சி |
| 144939 ஏ | 144939 பி |
| 144939 சி | 145032 ஏ |
| 145035 ஏ | 145036 ஏ |
| 145045 ஏ | 145108 ஏ |
| 145108 பி | 145443 ஏ |
| 145525 ஏ | 148998 ஏ |
| 148998 பி | 148999 ஏ |
| 148999 பி | |

சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 145013 ஏ | |

உடுவில்

| | |
|---|---|
| 144953 ஏ | 144953 பி |
| 144963 ஏ | 144963 பி |
| 145217 ஏ | 145217 பி |
| 145262 ஏ | 145414 ஏ |

# கற்கோவளம் கடற்கரை வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை

(புலோலி)

பருத்தித்துறையிலுள்ள கற்கோவளம்-கடற்கரை வீதியைத் திருத்திபுனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வீதிபுனரமைப்புக்கென நீண்டகாலமாகக் கற்கள் கொண்டு வந்து போடப்பட்டும் வீதி புனரமைக்கப்படவில்லையாம் இவ்வீதியில் கற்கள் போடப்பட்டிருப்பதால் அடிக்கடி விபத்துக்கள் இடம் பெறுவதோடு மக்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்து வருவதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

(க-52)

# நேற்றைய பாராளுமன்ற அமர்வில் றொனிடிமெல் ஆளும்கட்சி ஆசனத்தில்

(கொழும்பு)

உத்தேச அரசியல் யாப்பினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் வகையில் நேற்று பாராளுமன்றம்கூடிய போது, ஐக்கிய தேசியக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் றொனிடிமெல் ஆளும் கட்சியின் முன்வரிசையில் அமர்ந்திருந்தார்.

காலஞ் சென்ற அமைச்சர் தர்மசிறிசேனாநாயக்காவின் ஆசனத்தில் அமர்ந்திருந்து பாராளுமன்ற நிலைமைகளை றொனிடிமெல் அவதானித்தார்.

அத்துடன் ஐக்கியதேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சென்று ஆளும் கட்சியில் இணைந்து கொண்ட வேறு சிலரும் நேற்று பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி ஆசனத்தில் அமர்ந்திருந்தனர்.

இதேசமயம்,

கடந்த மாதம் 6ஆம்திகதி பாராளுமன்றில் இடம்பெற்ற அவசரகால நீடிப்பு பிரேரணையை மேலும் ஒரு மாதத்திற்குநீடிப்பதுதொடர்பான பிரேரணையில் அமைச்சர்றொனிடிமெல் ஆதரவாக வாக்களித்ததும் இங்கு குறிப்பிடத் தக்கது.

# நாட்டைப் பிரிவினை செய்யும் நோக்கம் எமக்குக் கிடையாது

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை நாட்டைப் பிரிவினை செய்வதற்கு நாம் எந்தவொரு வகையிலும் பங்காளிகளாக இருக்கப் போவதில்லை.

இனப் பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் நிரந்தரமான தீர்வு வழங்குவதன்றி நாட்டை இரண்டாகப் பிரிக்கும் எந்த நோக்கமும் எமக்குக் கிடையாது.

நேற்றுக் காலை உத்தேச அரசியல் யாப்பு சீர்திருத்த நகலை பாராளுமன்றில் சமர்ப்பித்த பின் உரையாற்றுகையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கை வரலாற்றில் இன்று ஓர் முக்கிய தினமாகும். நாடு, முன்னேற்றப் பாதையில் செல் இடைஞ்சலாக இருந்த ஒரே ஒரு பிரச்சினையான இனப் பிரச்சினைக்கு உத்தேச அரசியல் யாப்பு சீர்திருத்தம் மூலம் நல்லதோர் தீர்வு முன்வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

(உ)

# புதிய அரசமைப்பு சீர்திருத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக நேற்று நாடாளு மன்றத்தில் சமர்ப்பித்த அரசமைப்புச் சீர்திருத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து நேற்றுக் காலை மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது.

பாராளுமன்றத்திற்கு அருகே உள்ள பத்தரமுல்லை சுற்றுவட்டத்திற்கருகே ஸ்ரீஜெவர்த்தனபுர கோட்டை மாநகர முதல்வர் சந்திரடி சில்வாவின் ஏற்பாட்டில் இடம் பெற்றஇவ் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு நாட்டில் சமாதானம் நிலவ வேண்டுமானால் புதிய அரசமைப்புச் சீர்திருத்தத்தை அங்கீகரிக்க வேண்டும் என கோஷமெழுப்பினர்.

(உ)

# வீதியோர மீன் வியாபாரம்

(கோப்பாய்)

கோப்பாய் வடக்கு அரசடிப் பகுதியின் வீதியோரங்களில் கடந்த பல காலங்களாக கூடிவந்த மீன் சந்தையை, உடனடியாக கோப்பாய் மத்திய சந்தைப் பகுதிக்கு மாற்றுவதற்கான நடவடிக்கை சம்பந்தப்பட்ட பிரதேசசபை மேற்கொண்டுள்ளது.

(உ-79)

பல்கலைக்கழக கல்வி கற்று

# இரு வருடங்கள் பூர்த்தியாகியும் நியமனம் வழங்கப்படவில்லை

## யாழ். மாவட்ட பட்டதாரிகள் சங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மிகுந்த சிரமத்தின் மத்தியில் கல்வி கற்று பல்கலைக்கழக கல்வியைப் பூர்த்தி செய்து இரு வருடங்களிற்கு மேலாகியும் கூட எந்தவித வேலைவாய்ப்பையும் பெற்றுக் கொள்ள முடியாது தவிக்கின்றோம்.

மேற் கண்டவாறு யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி செயலருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளித்த மகஜரில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் அங்கத்தவர்களாகிய நாம் இந்நிலையில் தென்னிலங்கை வரவு செலவு திட்ட பிரமாணத்தின் அடிப்படையில் 12000 பட்டதாரிகள் திட்டத்திற்கு அமைவாக வேலைவாய்ப்பு வழங்கப்பட்ட போதும் யாழ். மாவட்டத்தில் 8000 பட்டதாரிகள் திட்டத்திற்கு அமைவாக 445 பேரிற்கு வேலை வாய்ப்பினை வழங்கிய பின்னர் மிகுதியான வேலை வாய்ப்புக்கள் இன்று வரை பூர்த்தி செய்யப்படவில்லை.

இது சம்பந்தமாக நாம் திறைசேரியுடன் தொடர்பு கொண்ட போது ஏனைய பட்டதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவில்லையென (BAD/1/29/A-X of 25/05/2000) என திகதியிடப்பட்ட பதில் அனுப்பப்பட்டுள்ளது.

ஆனால் எம்மிடம் நேர்முக பரீட்சைக்கு சமுகமளித்தும் இதுவரை வேலை வாய்ப்பு பெறாதவர்களின் பட்டியல் உண்டு.

மேலும் வடகிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாக்கத்தின்படிவடகிழக்கில் 817 பட்டதாரிகளிற்கு ஆசிரிய நியமனங்கள் வழங்குவதாக கடந்த பெப்ரவரி மாதம்உறுதியளிக்கப்பட்டது. அதுவும் இதுவரை நிறைவேற்றப்படவில்லை. எனவே இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பாக நாம் மாகாண கல்வியமைச்சின் செயலாளர் ஆளுநர் யாழ், மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்றவர்களிற்கு மகஜர்கள் மூலமாகவும் நேரடியாகவும் தெரியப்படுத்தியபோதும் அவர்கள் இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பதனையிட்டு நாம் மிகுந்த வேதனையடைகின்றோம்.

1998 ல் நூலக அபிவிருத்தி அலுவலராக (LDO) நியமனம் பெற்றவர்களுக்கு மீண்டும் 61 பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டது. இந்த நியமனம் தவறானது என பட்டதாரி சங்கத்தினரால் சுட்டிக்காட்டப்பட்டு அது இரத்து செய்யப்பட்ட போதிலும் அந்த நியமனம் இதுவரை மீளவழங்கப் படவில்லை.

இதைத் தவிர இன்று யாழ். பல்கலைக் கழகத்திற்கு புதிய பதவி நிலைகளை நிரப்புவதற்கு பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. மற்றும் யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் இன்று வரை பட்டதாரிகளுக்கான 10 வெற்றிடங்கள் நிரப்பப்படாது உள்ளன. இது போன்று பல அரச துறைகளில் பட்டதாரிகளுக்கான பதவி நிலை வெற்றிடங்கள் நிரப்பப்படாது உள்ளன. எனவே இவைகள் யாவும் எமது பட்டதாரிகள் மூலம் நிரப்பப்படலாம்.

எனவே இவ்வாறான நியமனங்கள் மூலம் எமது பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பினை பெற்றுக் கொடுக்கும் வல்லமையும், தகுதியும், பாராளுமன்ற உறுப்பினரும், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் ஆகிய தங்களுக்கே உண்டு.

எனவே எமது அங்கத்தவரின் ஏழ்மையான குடும்பப் பின்னணிகள், மிகவும் கடினமான போர்க்காலச் சூழ்நிலையில் கல்வி கற்று வெளியேறிய நிலை, நீண்ட கால வாழ்க்கையை கல்வியில் செலவழித்த பின்பும் பல வருடங்கள் வேலைக்காகக் காத்திருந்த நிலை என்பவற்றைக் கவனத்தில் கொண்டு எமக்கு துரித நிவாரணமாக இவ் வேலை வாய்ப்பினைப் பெற்றுத்தரும்படி மிகவும் தயவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-03)

# சுடரொளி சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையின் தாதியர் பாடசாலை மாணவர்களால், அண்மையில் 'சுடரொளி' சஞ்சிகை வெளியிடப்பட்டது.

யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம் இச் சஞ்சிகை வெளியீட்டில் பிரதம விருந்தினராகக் கலந்து முதற்பிரதியை பெற்றுக் கொண்டார்.

1976ஆம் ஆண்டு முதல் வருடா வருடம் வெளியிடப்பட்டு வரும் சுடரொளி சஞ்சிகை நீண்ட இடைவெளியின் பின் மீண்டும் வெளிவருவது குறிப்பிடத்தக்கது.

(உ - 12)

# விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியல் கல்லூரி மாணவர்களிடையேயான இல்லமெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 9 ஆம் திகதி இடம்பெற உள்ளன

கல்வியியல் கல்லூரி பீடாதிபதி தலைமையில் நடைபெறும் மேற்படி போட்டியில் பேராசிரியர் சு வித்தியானந்தன் இல்லம், பேராசிரியர். அ.துரைராசா இல்லம், பேராசிரியர் ப.சந்திரசேகரம் இல்லம் ஆகிய இல்லங்களுக்கிடையே போட்டிகள் இடம் பெறவுள்ளன.

(க)

● ● ●

(மந்திகை)

வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபையின் கரவெட்டி வடக்கு முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டுப்போட்டி நாளைமறுதினம் 6 ஆம் திகதி காலை 9மணிக்கு வதிரி புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும்.

பாலர்பாடசாலை ஆசிரியை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மேற்படி பிரதேச சபைத்தலைவர் வ. நடராஜா பிரதமவிருந்தினராக கலந்து சிறப்பிப்பார்.

(த-23)

# பங்கீட்டு அடிப்படையில் பெற்றோல்

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்கு விவசாய சம்மேளன அங்கத்தவர்களிற்கு பங்கீட்டு அடிப்படையில் ஒரு லீற்றர் பெற்றோல், பயிர்ச் செய்கை நிலத்தின் பரப்பளவு வீதத்திற்கு கேற்ப மண்ணெண்ணெயும் விநியோகிக்கப்படுகிறது.

அதேவேளை அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் நிர்வகிக்கப்படும் அச்சுவேலி மத்திய எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பங்கீட்டு அட்டைக்கு பொற்றோல் வழங்கப்படுகின்றது.

இங்கு டீசல் விநியோகமும் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

(த-14)

# வவுனியா வைத்தியசாலை சத்திரசிகிச்சை கூடத்திற்கு அருகில் மூன்று கிரனேற்றுகள் மீட்பு

(வவுனியா)

வவுனியா வைத்தியசாலையில் உள்ள சத்திர சிகிச்சைக் கூடத்திற்கு அருகாமையில் மூன்று கிரனேற்றுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வைத்தியசாலையின்சத்திர சிகிச்சை நிலையத்திற்கு அருகாமையில் இவை இருப்பதாக தகவல் கிடைத்தே இவை மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை மீட்கப்பட்ட கிரனேற்றுகள் தப்பியோடிய இராணுவத்தினரால் கைவிடப்பட்டவையாக இருக்கலாமென நம்பப்படுகிறது.

வவுனியாவில் உள்ள குப்பை கிடங்குகளில் இராணுவ சீருடைகள் பல காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(வ)

# அலங்கார உற்சவம்

(கோப்பாய்)

கோப்பாய் மத்தி அருள்மிகு பலானை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

(செ-79)

# ஒன்று கூடல்

(மந்துவில்)

பலாலி ஆசிரியர் கலாசாலை பழையமாணவர்களின் ஒன்று கூடல் நிகழ்வு இன்று பிற்பகல் 1மணிக்கு மேற்படி கலாசாலையின் சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறும்.

(த-39)

# ஆஸ்பத்திரியில் சடலம்

(யாழ்ப்பாணம்)

இனம் தெரியாத பெண் ஒருவரின் சடலம் கொடிகாமம் பொலிஸாரினால் யாழ் போதனாவைத்தியசாலைக்கு நேற்று முன் தினம் இரவு கொண்டுவரப்பட்டது.

சடலம் மேற்படி வைத்திய சாலை பிரேத அறைக்குள் வைக்கப்பட்டுள்ளது.

(க-12)

## மட்டக்களப்பில் இம் முறை கூடுதலான கட்சிகள் போட்டியிடும்

(மட்டக்களப்பு)

எதிர் வரும் பொதுத் தேர்தலில் கூடுதலான அரசியல் கட்சிகள் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே போட்டியிட உள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இம் மாவட்டத்தில் சுமார் 12 அரசியல் கட்சிகள் போட்டியிடும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி ஸ்ரீலங்கா முஸ்லீம் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட், ரெலோ, தேசிய விடுதலை முன்னணி, பிரஜைகள் முன்னணி தேசிய ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகள் இம் முறை போட்டியிட உள்ளனர்.

இதேவேளை அரசியல் கட்சிகளில் நம்பிக்கை அற்றவர்கள் சுயேட்சைக் குழுக்களை அமைத்துவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (சு-60)

## பரு, ஹாட்லிக் கல்லூரியை தேசிய பாடசாலையாக தரமுயர்த்த நடவடிக்கை

(புலோலி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை தேசிய பாடசாலையாகத்தர முயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இக்கல்லூரியை தேசிய பாடசாலையாகத்தர முயர்த்துமாறு நீண்டகாலமாகக் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது கல்லூரியின் பழையமாணவரும் இலங்கைப் பாராளுமன்றத்தின் சபாநாயகருமான கே.பி. இரத்நாயக்கா இக்கல்லூரியை தேசிய பாடசாலையாகத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சர் ரிச்சாட் பத்திரானவைக் கடித மூலம் கேட்டுள்ளார். (க-52)

## சனி பகவானின் இடப்பெயர்வு...

நேற்றைய தொடர்

### கும்பம்

(அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி, 1 ஆம், 2 ஆம், 3 ஆம் பாதங்கள்)

உங்களுக்கு 03.08.2000 இல் சனியும், 02.08.2000 இல் ராகு. கேதுக்களும் மாற்றமடைந்து முறையே 21/2 வருடங்கள் ஒன்றரை வருடங்கள் அந்தந்த இராசிகளில் சஞ்சாரஞ் செய்யும் 14.10.2000முதல்11.04.2001 இல் மேடத்தில் வக்கிரமடையும் குருபகவான் 02.06.2000 முதல் 4 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்கின்றார். அது போல 03.06.2000 முதல் சனி பகவான் 4ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்ய இருக்கின்றார். 4 இல் சஞ்சரிக்கும் குரு பகவான் தனது விசேஷ பார்வையால் ஜென்ம ராசிக்கு 8ஆம் வீடு 10ஆம் வீடு 12 ஆம் வீடு ஆகியஇடங்களைப் பார்வை செய்கின்றார். இந்த பெயர்ச்சி உங்களுக்கு சோதனைகளை உண்டாக்கும். திருப்பங்கள் இந்த பெயர்ச்சியால் ஏற்படும். அக்டோபர் முதல் ஏப்ரல் வரை சனியின் 3 ஆம் இட வக்கிரயோக சஞ்சாரம் நன்

கள் பகைமை பாராட்டுவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் எதிர்பாக்கும் வெற்றி கிடைக்காது. நண்பர்களால் தன விரயம். எதிரிகளால் இடையூறு உண்டாகலாம். கொடுக்கல் வாங்கள் திருப்தியினைக் கொடுக்காது மாணவர்களுக்கு படிப்பில் ஊக்கமும், விடாமுயற்சியும் அவசியம்.

### மீனம்

(பூரட்டாதி 4 ஆம்பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

குரு பகவான் 02.06.2000 முதல் 3 இல் சஞ்சாரம் செய்கிறார். குரு தனது விசேஷ பார்வையான 5 ஆம்பார்வையால் 7 ஆம் வீட்டையும், 7 ஆம் பார்வையால் 9 ஆம் வீட்டையும் 9ஆம் பார்வையால் 11 ஆம் வீட்டையும் பார்வை செய்கிறார். எனவே இந்த குரு பெயர்ச்சி சில நேரங்களில் சோதனைகள் உண்டானாலும்வெற்றிகளை பொதுவாக குவித்தபடியே இருக்கும்.

பேராசிரியர்
த. சத்தியதாஸன்

03.08.2000 முதல் சனி பகவானும் 3 ஆம் வீட்டில்

## சிரமைப்புப் பணி

(இணுவில்)

யாழ்ப்பாண புதுமடம் றோ.க.த.க பாடசாலை மாணவர்களின் குடிநீர்க் கிணற்றினை பட்டினிக் கொதிரான நிறுவன்ம் சிரமைத்துக் கொடுத்துள்ளது.

இப் பாடசாலை மாணவர்கள் தமது குடிநீர் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அண்மைக் காலங்களில் பெரிதும்சிரமப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-49)

## ஐந்தாம் தர மாணவர்களுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை ஐந்தாம் தர மாணவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொக்குவில் ஞானபண்டிதா வித்தியாசாலையில் சந்திக்குமாறு நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை அதிபர் க. சண்முகலிங்கம் கேட்டுள்ளார். (செ)

## அங்குரார்ப்பணக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

யா/ சரவணை சின்னமடு றோமன் கத்தோலிக்கதமிழ்க் கலவன் பாடசாலையின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு மேற்படிபாடசாலை மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இக் கூட்டத்தில்பாடசாலையினை மீண்டும் இயக்குதல், புனரமைப்புச் செய்தல் தொடர்பாக ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (செ-75)

## பதவி ஏற்பு

(கொழும்பு)

யாழ்ப்பாண பாதுகாப்புப் படைகளின் தளபதியாக மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திரா இன்று பதவி ஏற்கின்றார்.

1970 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கடேற் உத்தியோகத்தராக இலங்கை இராணுவத்தில் இணைந்து கொண்ட இவர் தியத்தலாவை இராணுவப்பயிற்சிநிலையத்தில் தனது பயிற்சியை நிறைவுசெய்தார்.

இலங்கைப் பொறியியலாளர் முதலாவது கடேற் பிரிவில் இரண்டாவது லெப்டினண்ட்டாகப் பணியாற்றினார்.

## கிளிநொச்சியில் மேலும்ஒரு எலும்புக்கூடு மீட்பு

(வவுனியா)

கிளிநொச்சியில் மேலும் ஓர் எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கரந்தன் 2 ஆம் கட்டைப் பகுதியில் கிணறு ஒன்றினைத் துப்பரவாக்கும் போது இவ் எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டு, அடையாளம் காண்பதற்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (உ)

## பொலநறுவையில் மினி சூறாவளி நூறிற்கு மேல் வீடுகள் சேதம்

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டத்தில் நெதிகிசிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் கடுமையான காற்று வீசியதன் காரணமாக பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

மணிக்கு 100 மைல் வேகத்தில் இரண்டு நிமிடங்கள் கடுமையான காற்று வீசியதாகவும் இதனால் சுமார் 125 வீடுகள் சேதமடைந்ததாகவும் தென்னை, வாழை போன்ற பயன்தரும் மரங்கள் முறிந்து விழுந்ததாகவும் தெரியவருகிறது. (ந)

## சட்டவிரோதமாக கசிப்பு வைத்திருந்த நபருக்கு 4 ஆயிரம் ரூபா அபராதம்

### பருத்தித்துறை நீதிமன்றம் தீர்ப்பு

(புலோலி)

சட்ட விரோதகமாககசிப்பு வைத்திருந்த வருக்குப் பருத்தித்துறை நீதிமன்றம் 4090 ரூபா அபராதமும் அபராதத்தைச் செலுத்தத்தவறின் 2½ மாத கடுழியச் சிறைத் தண்டனையும் 3 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 6 மாத கடுழியச் சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

பருத்தித்துறை 2 ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த செல்லக்கதிரன் வேலும்மயிலும் என்பவர் சட்ட விரோதமாக கசிப்பு வைத்திருந்தாகக் குற்றஞ் சாட்டப்பட்டு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் பதில் மாவட்ட நீதிபதி திரு ஏ.கே. நடராஜா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோதேமேற்கூறப்பட்ட தண்டனைகள் வழங்கப்பட்டது. (க-52)

## முறைசாராக் கல்வியினை முன்னெடுத்துச் செல்வதில் அதிபர்கள் அசமந்தப் போக்கு

(மந்திகை)

வலய கல்வித் திணைக்களங்களினால் பாடசாலைகளில் நடாத்தப்பட்டு வரும் முறைசாராக் கல்விப் பிரிவின் வேலைத்திட்டங்களுக்கு பாடசாலை அதிபர்கள் உரிய ஆதரவு காட்டுவதில்லை என முறைசாராக் கல்விப் பிரிவின் திட்ட அலுவலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின்உத்தேசநிதி ஒதுக்கீட்டின் கீழ் நடத்தப்பட்டு வரும் இவ் முறைசாராக் கல்விப் பயிற்சி நெறிகளை பாடசாலைகளில் நடத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிபர்கள் காட்டி வரும் அசமந்தப் போக்கின் காரணமாக

எதிர்கால பொருளாதார வாழ்வைச் சீர்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டமானது அதனை முன்னெடுத்துச் செல்ல வேண்டியவர்கள் காட்டும் ஏனோ தானோ என்ற போக்கினால் நோக்கம் நிறைவேறாமல் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது,

இதே வேளையில், குறிப்பிட்ட சில பாடசாலைகளில் மட்டுமே முக்கியமான இல முறைசாராக் கற்கை நெறிகள் இடம்பெறுவதாகவும் இக்கற்கை நெறிகளை சகல இடங்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் எனவும் கற்கை நெறிகளில் பங்குகொண்டு பலனடைய

டாக்கும். திருப்பங்கள் இந்த பெயர்ச்சியால் ஏற்படும். அக்டோபர் முதல் ஏப்ரல் வரை சனியின் 3 ஆம் இட வக்கிரயோக சஞ்சாரம் நன்மையளிக்கும்.

மற்றைய காலங்களில் உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும், எதிர்பாராத விபத்துக்கள் உண்டாகும், மனைவியின் உடல் பாதிக்கும், மருத்துவச் செலவுகள் கூடும், அடிக்கடி பயணமும் அதனால் தன விரயமும் உண்டாகும், குடும்பத்தில் கவலைகள் தரக்கூடிய சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும், எடுக்கும் எந்த முயற்சியும் வெற்றியைத் தராது, சிலருக்கு குடியிருக்கும் வீட்டில் கவலைகள் ஏற்பட்டு இடம் மாறலாம், பொருளாதார நிலை மந்தமாக இருக்கும். பெற்ற கடனைத் திரும்பவும் செலுத்த முடியாது.

கணவன் மனைவி உறவு நிலை திருப்தி இருக்காது. சிலருக்குச் சொத்து இழப்பு ஏற்படும், வியாபாரத்தில் லாபம் குறையும், தொழில் போட்டிகள் அதிகமாகும்; அரசு வழியில் நிம்மதிக் குறைவும் ஏற்படும் உத்தியோகஸ்தர்களுக்கு திடீர் இடமாற்றம் ஏற்படும். சிலர் விடுப்பில் செல்வார்கள், பெண்களுக்கு மன நலம் பாதிக்கும் குடும்ப வாழ்வில் சோதனைகளும் உண்டாகும். தேவையில்லாத பழிச்சொல் தேடிவரும் திருமணம் நடைபெற வாய்ப்பு இல்லை; உறவினர்

பேராசிரியர்
த. சத்தியதாஸன்

03.08.2000 முதல் சனி பகவானும் 3 ஆம் வீட்டில் சஞ்சாரம் செய்கிறார். இதனால் ஏழரை சனியிலிருந்து முற்றிலும் விடுதலையாகிய நீங்கள் எதிலும் வெற்றிகளையும், சுபீட்சமான நிலையும் மேன்மையான நிலைகளையும் அடைவீர்கள். சனியின் 6 மாத வக்கிரத்தால் 71/2 ச் சனித் தாக்கம் மீண்டும் உண்டு.

உடல் ஆரோக்கியம் திருப்தியாக இருக்காது பொருளாதார நிலையில் சங்கடம், கொடுக்கல், வாங்கல் அனுகூலமற்ற பலன்கள் யாவும் உண்டாகும்: எதிர்ப்புகளும், பகைமைகளும் பொருளாதார தட்டுப்பாடும் உண்டாகும் புதிய கடன்கள் திடீரென்று உதயமாகும் விவசாயிகளுக்கு நல்ல வருமானம் ஏற்பட தடை உண்டாகும். கூட்டுத்தொழில் சாதகமாக இருக்காது. புதிய முயற்சியினை தவிர்க்கவும் உத்தியோகஸ்தர்களுக்கு சக ஊழியர்களின் விரோதமும் அவர்களால் இடைஞ்சலும் உண்டாகும்: மேலதிகாரிகளின் வெறுப்பைச் சந்திக்க நேரிடும். கடன்கள் கூடும் உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்காது. தசா புத்தி சாதகமாக இல்லாதவர்களுக்கு பதவியில் இறக்கம் கௌரவக் குறைவு போன்றவை. உண்டாகும்;

(சு)

இலங்கைப் பொறியியலாளர் முதலாவது கடேற் பிரிவில் இரண்டாவது லெப்டினண்ட்டாகப் பணியாற்றினார்:

இலங்கை இராணுவ அக்கடமியில் தளபதியாக 1993 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற 'றிவிரச' இராணுவ நடவடிக்கையின் போது 52 ஆவது படைப்பிரிவின் பிரதித் தளபதியாகவும் கடமை புரிந்தார்.

பின்னர் கொழும்பு இராணுவத் தலைமையகத்தில் செயலாளராகக் கடமை புரிந்த இவர் கடந்த ஜூலை மாதம் வன்னிப்பாதுகாப்புப் படைத் தளபதியாக கடமை புரிந்தவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது;

(க-வ)

## ஓய்வு பெற்ற அரசஊழியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவைச்சேர்ந்த ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தருக்கான கூட்டம் கடந்த மாதம் 26ஆம் திகதி இடம் பெற்றது.

இக்கூட்டத்திற்கு எழுநூறுக்கும் மேற்பட்ட ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் பங்குபற்றினர். இவர்களில் இருந்து நிர்வாகஉறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுமுள்ளனர்;

(க - 12)

...கல்விப் பயிற்சி நெறிகளை பாடசாலைகளில் நடத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிபர்கள் காட்டி வரும் அசமந்தப் போக்கின் காரணமாக பயிற்சித் திட்டங்களுக்கென ஒதுக்கப்படும் நிதி திருப்பி அனுப்பப்பட வேண்டிய நிலை தோன்றுவதாகவும் தெரியவந்துள்ளது.

பாடசாலைக் கல்வியை இடை நிறுத்திய மற்றும் முடித்துக் கொண்டவர்களது

## மாட்டுவண்டிச் சவாரி

(இணுவில்)

அளவெட்டி கலைமகள் சனசமூக நிலையம் நடாத்தும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நாளை மறுதினம் 6 ஆம் திகதி நடைபெறும்.

இந் நிகழ்வு கந்தரோடை சவாரி திடலில் நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும்.

(த-49)

வும் இக்கற்கை நெறிகளை சகல இடங்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் எனவும் கற்கை நெறிகளில் பங்குகொண்டு பலனடைய விரும்புவோர் பலரும் சுட்டிக் காட்டியுள்ளனர். (உ-23)

## விண்ணப்பம் கோரல்

(கோப்பாய்)

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கான இலங்கை கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கட்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது;

பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பத்து வருடத்துக்கு மேற்பட்ட சேவையை முடித்த ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது: இது பற்றிய விபரங்கள் கடந்த மாத 28ம் திகதி வர்த்தமானியில் வெளியிடப் பட்டுள்ளது.

(க-79)

# வர்த்தக நிலையத்தில் தீ
## அவிசாவளையில் சம்பவம்

(கொழும்பு)

அவிசாவளைப்பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றில் பெரும் தீ விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் அனர்த்தத்தினால் கடையின் பெரும் பகுதி சேதமடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது;

எனினும் எவரும் பலியாகியதாகவோ அல்லது காயமடைந்ததாகவோ இது வரையில் தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

தீ விபத்து சம்பவம் குறித்த விசாரணைகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன;

(க)

# பொதுஅறிவுவினாக்கள்

இல. 16 தொகுப்பு:- யூட்

**பின்வருவனவற்றை கண்டு பிடித்தவர்கள் யார்?**

1. மூக்குக்கண்ணாடி—
2. சைக்கிள் ரயர்—
3. சேவிங் றேசர்—
4. ராடர்—
5. ஜெற் இஞ்சின்—

**பின்வரும் நாடுகளின் நாணய அலகுகள் எவை?**

6. வட வியட்நாம்—
7. ருமேனியா—
8. ஹாலந்து—
9. எல்சல்வடோர்—
10. பல்கேரியா—
11. ஆசியா மற்றும் பசுபிக் நாடுகளுக்கான பொருளாதார கமிசனின் தலைமை அலுவலகம் எங்குள்ளது?
12. வெப்பப்படுத்தும் போது இழக்கப்படும் விற்றமின் எது?
13. ஒட்சிசனை கலங்களுக்குள் கொண்டு செல்லும் பொருள் எது?
14. மனித உடலிலுள்ள எலும்புகளின் எண்ணிக்கை எவ்வளவு?
15. R. N. A இன் விரிவாக்கம் யாது?
16. கொழும்பு துறைமுகம் எப்போது தேசிய மயமாக்கப் பட்டது.
17. சரப்பந்தாட்டத்தை இலங்கைக்கு அறிமுகம் செய்தவர் யார்?
18. பட்டம் விடும் கலையின் புகழ்பெற்ற நாடு எது?
19. இலங்கையின் புனித மரம் எது?
20. இலங்கையில் பிறிமா ஆலை எங்குள்ளது?
21. 2000ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் எங்கு இடம் பெற இருக்கிறது?
22. மனிதனது தும்மலின் வேகம் எவ்வளவு?
23. மூளை விருத்தி கூடிய நீர்வாழ் உயிரினம் எது?
24. பெர்லின் சுவர் எப்போது கட்டப்பட்டது?
25. ஐரோப்பாவின் தொட்டில் எனப்படுவது எந்த நாடு?
26. முதலாவதாக வெள்ளியில் இறங்கிய செயற்கை துணைக்கோள் எது?
27. மனிதன் சந்திரனில் இறங்கிய நாள் எது?
28. நைஜர் நாட்டின் தலைநகர் எது?
29. சணல் அதிகமாக உற்பத்தி செய்யும் நாடு எது?
30. மஞ்சள் நதி எனப்படும் நதி எது?
31. அணுவிலுள்ள இயங்கும் பகுதி எது?
32. சர்வதேச கடற்பாதுகாப்பு நிறுவனத்தின் தலைமை அலுவலகம் எங்குள்ளது?
33. ILO என்பது எந்த சர்வதேச நிறுவனம் ஆகும்?
34. ஐரோப்பிய பொருளாதார அமைப்பு எப்போது உருவாக்கப்பட்டது?
35. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
36. ரூபவாஹினியின் கல்விச் சேவை எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
37. 188 நாடுகளின் தேசிய கீதம் பாடி சாதனை படைத்தவர் யார்?
38. 1996ல் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின் அதிகார பூர்வ சின்னத்தின் பெயர் எது?
39. சர்வதேச விமான போக்குவரத்து நிறுவனம் எப்போது உருவாக்கப்பட்டது?
40. மிக வெப்பமான கோள் எது?

குறிப்பு:-

இதற்கான விடைகளை 10 - 08 - 2000 ற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கவும்.

**அறிவியல் பகுதி வினா இல. 16**

"வலம்புரி"
இல. 15 வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ..............................

சொந்த முகவரி: ..............................

கற்கும் பாடசாலை: ..............................

மாணவர் கையொப்பம்: ..............................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

# வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் மட்டக்களப்பில் மறியல்போர்

## 350 க்கும் மேற்பட்டோர் பங்கு பற்றினர்

(மட்டக்களப்பு)

மட்டு, மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை மட்டு மகாத்மா காந்தி சதுக்கத்தில் அமைதியான மறியல் போராட்டம் ஒன்றை நடத்தியது.

காலை 10.00 மணிமுதல் ந.பகல் 1.00 மணி வரை இப் போராட்டம் தொடர்ந்தது. கடந்த ஜூன் மாதம் 26 முதல் 30 வரை மேற்படி சங்க உறுப்பினர்கள் நியமனம் வழங்கக்கோரி இதே இடத்தில் அடையாள உண்ணா விரதத்தில் ஈடுபட்டனர்.

இது வரை தமது நியமனம் குறித்து ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. எமது பிரச்சினை குறித்து கவனத்தில் கொள்ளாவிட்டால் 3 ஆம் திகதி முதல் சாகும் வரை உண்ணா விரதம் இருக்கப் போவதாக மாவட்ட வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கம் ஏற்கனவே அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

போராட்ட முடிவில் ஊர்வலமாகச் சென்ற 300க்கு மேற்பட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் அனுப்புவதற்காக மகஜர் ஒன்றினை மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்துள்ளனர். (சு-60)

## யாழ். கோட்ட மட்டப் போட்டியில் சிறந்த தகமைகளைப் பெற்றோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 6 ஆம், 7 ஆம் திகதிகளில் நடைபெற்ற யாழ். கோட்ட மட்டத் தமிழ்த்தினப் போட்டி நிகழ்வுகளில் முதலாம், இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்ற பிரிவு 3 மாணவர்களின் பெயர் விபரங் கீழே தரப்படுகின்றது.

கட்டுரை, கடிதம் வரைதல் நிகழ்ச்சியில் ச. பிரியாங்கரி யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, அ துஷ்யந்தி யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, ஜி. ஜென்னி யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்.

பேச்சு நிகழ்ச்சியில் ம. மயூரா யாழ். வேம்படி மகளிர் உயர்தயப் பாடசாலை, சி. ரகுமான் யாழ். புனித பரியோவன் கல்லூரி, தெ. கர்சன் யாழ் மத்திய கல்லூரி.

பாவோதல் நிகழ்ச்சியில் தி. வாணி யாழ். வேம்படி மகளிர்உயர்தரப்பாடசாலை, க. நிரஞ்சினி யாழ். செண்ஜேம்ஸ் மகளிர் கல்லூரி, ப விஜூசியன் யாழ் மத்திய கல்லூரி,.

இசை நிகழ்ச்சியில் ர. ஸ்வஸ்திகா யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, பா. கஸ்தூரி யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, அ. பீரஜீபன் யாழ். பரியோவான் கல்லூரி,.

நடன நிகழ்ச்சியில் பொ. சுதாஜினி யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, கு. காயத்திரி யாழ். வேம்படி மகளிர் உயதரப் பாடசாலை, எம். சவுத்திரி யாழ். திருக்குடுப்ப கன்னியர் மடம். (சு)

★ கிரிக்கெட்

## தென் ஆபிரிக்கா 7 ஓட்டங்களால் இலங்கையை தோற்கடித்தது!

(கொழும்பு)

இலங்கை தென் ஆபிரிக்கா அணிகளுக்கிடையில் கண்டியில்புதன்கிழமைநடைபெற்று முடிந்த 3வது டெஸ்ட்போட்டியில் தென் ஆபிரிக்க அணி 07 ஓட்டங்களால் இலங்கை அணியை தோற்கடித்தது.

தென் ஆபிரிக்க அணி முதலாவது இன்னிங்சில் 257 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்சில் 231 ஓட்டங்களையும் பெற்றது.

இலங்கை அணி 1வது இன்னிங்சில் 308ஓட்டங்களையும் 2வதுஇன்னிங்சில் 169ஓட்டங்களையும் பெற்றது.

இதற்கு முன் நடைபெற்ற இரண்டு ஆட்டத் தொடரில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு தவையும் வெற்றிபெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது. (க]

## பொது அறிவு வினா இல. 15

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு

(01) கு. குருபரன், யாழ்ப்பாணம்.
(02) சி. சயந்தன், வட்டுக்கோட்டை.
(03) ஆ. பத்மதர்சினி, நீர்வேலி.
(04) சீ. சுஜீகரன், கச்சாய்.
(05) கு கிரிஷா, திருநெல்வேலி.
(06) ஜெ. நிரோஷன், வட்டுக்கோட்டை:
(07) உ. அனித்தா, உரும்பிராய்.
(08) அ. அபிராமி, வட்டுக்கோட்டை:
(09) கி. காயத்திரி, கொக்குவில்.
(10) தி மாதவன். நல்லூர்.
(11) வே. நிரஞ்சன், சுன்னாகம்:
(12) தெ. விமலேந்திரன், கொக்குவில்.
(13) பொ. சுபாசினி, யாழ்ப்பாணம்.
(14) க. வக்ஷலா, நல்லூர்.
(15) பு. உமாகாந்தன், ஊரெழு:
(16) பெ. கிருஷாந்தன், கொட்டடி.
(17) கே. சுமிதா, வேலணை.
(18) கி. யாழினி, திருநெல்வேலி.
(19) கு. சசிரேகா, கோண்டாவில்:
(20) பொ பிரணவன், ஊர்காவற்றுறை.
(21) வே. செந்தூரன், மானிப்பாய்.

## பொது அறிவு வினா இல. 15 இற்கான விடைகள்

1) கொரியா
2) பதஞ்சலி
3) மொஸாட்
4) நெதர்லாந்து
5) யூலை 23
6) டயட்
7) ஷேக் அதீனா
8) பாகிஸ்தான்
9) ஈராக்
10) அகதிகள் தினம்
11) டினார்
12) பாரதரத்னா
13) 1914
14) பூட்டான் திம்புவில்
15) லண்டன்
16) 1903ல்
17) ஜப்பான்
18) சென்னை
19) வாஷிங்டன்
20) போர்த்துக்கல்
21) கி. மு. 228
22) கனடா
23) 8
24) நீலோற்பலம்
25) யூலை 04
26) கவானா
27) காட்லிங்
28) சிங்கப்பூர்
29) பிரித்தானியா
30) சனி
31) 8 நிமிடம்
32) இந்தியர்
33) 8850 மீற்றர்
34) 1925
35) உலக தபால் சங்கம்
36) கண்ஸ்தாந்தியன் கோவ்ஸ்கி
37) 1928
38) ஒலிவ் இலை
39) 9.46 இலட்சம் கோடி கி. மீ.
40) 6 வருடம்

## செயலகத்தில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

எரிபொருள் விநியோகம், நிவாரண விநியோகம் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பிரதேச செயலர்கள், பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், கூட்டுறவு உதவி ஆணையாளர், பெற்றோலியக் கூட்டுத்தாபன பொதுமுகாமையாளர், கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம், மற்றும் பிரதிநிதிகள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் கேட்டுள்ளார். (க-3)

## இன்று விளையாட்டுப் போட்டி

(மந்துவில்)

பலாலி ஆசிரியர் கலாசாலையின் இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று 4ஆம் திகதி கலாசாலை மைதானத்தில் காலை 9 மணிக்கு நடைபெறும்.

அதிபர் ஐ. சதாசிவமூர்த்தி தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மேலதிக அரச அதிபர் து வைத்திலிங்கமும், சிறப்பு விருந்தினராக நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். [த-39]

இன்று ஒரு தகவல்

## தீதும்நன்றும் பிறர்தர வரா

அது ஒரு விவசாயக்கிராமம் அதைச் சுற்றிப் பற்றைக் காடுகள் வளர்ந்திருந்தன அங்குள்ள விவசாயிகள் கோழி வளர்ப்பிலும் ஈடுபட்டிருந்தனர். அப்பற்றைக்காட்டில் கீரிகளின் நடமாட்டம் அதிகமாக. இருந்தது அவைகள் கோழிகளை களவாக பிடித்து உண்டு மகிழ்ந்தன அப்படியிருந்தும் ஒரு கருநாகம் வசித்து வந்தது.

அதுமிக அவதானமாகத் தனது காரியங்களைச் செய்தமையால் கீரிகளின் கண்களில்படாமல் பலகாலம்வாழக் கூடியதாக இருந்தது. எப்படியாயினும் நிம்மதியற்ற வாழ்க்கையே அதற்கு இதனால்இந்த ஊரை விட்டு வேறு இடத்துக்குச் செல்லத் தீர்மானித்தது கீரிகளின் கண்ணுக்குள் எப்படிப் பஞ்சை வைப்பது அதன் கண்கள் கூர்மையானவை சுறுசுறுப்பானவை. அத்துடன்கிரி துனியாகவாழ்ந்தது. அவர்களிடமிருந்து தப்பிச் செல்வதென்பது மறுபிறவி எடுப்பதைப் போலாகுமென்று எண்ணி அவ்விடத்தைவிட்டு எப்போது புறப்படலாம் அது எப்போது நடக்கும் என்று ஏங்கிக் கொண்டிருந்தது பாம்பு. அன்றொரு நாள் எதிர்பாராத பெரும் மழை! கருமுகில்கள் புடைசூழத் தொடங்கின. பெருங்காற்று வந்த திசையெல்லாம் மரங்கள் ஆடிக்கொண்டிருந்தன. எங்கும ஓரே சோளஎற சத்தம். மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடினர். பறவைகள் மிருகங்கள் எல்லாம் உறைவிடம் தேடி விரைந்தன சொற்ப நேரத்தில் வெள்ளம் கரைபுரண்டு ஓடத்தொடங்கியது. கடும் தாகத்திற்குக் குளிர் நீர் கிடைத்தது போல நிம்மதி ஏற்படவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திய நாகம் ஓடும் வெள்ளத்தில் துள்ளிப்பாய்ந்தது கீரிகள் எதுவும்காணாத வகையில் தலையை மாத்திரம் வெள்ளத்தின் மேல் நீட்டிக் கொண்டு நல்ல இடம் வரும்வரை வெள்ளத்தோடு வெள்ளமாகநீந்திக் கொண்டு சென்றது. ஒரு வயற்கரையை அடைந்ததும் மெதுவாகத் தண்ணீரில் இருந்து வெளியே வந்து ஒரு வரம்படியில் சற்று இளைப்பாறியது. அக்கிராமம் எப்படிப்பட்டதோ தெரியாது என்ற சிந்தனையுடன் எப்படியும் முதலில் தப்பித்துக்

வால் அனேகமானோருக்குக் கஷ்டம்தான் ஏற்படும். ஒரு சிலருக்கு அதிர்ஷ்டம் தான் கிடைத்திருக்க வேண்டும்.

இப்படியாக ஒருநாள் பாம்புக்குஒரு ஆண்எலி வகையாக மாட்டிக் கொண்டது. அதனைஉயிருடன்விழுங்கியும் விட்டது. அந்த நிம்மதியில் வரம் பொன்றில் நிமிர்ந்த படிமல்லாக்காகக்கிடந்து சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்த அந்த நேரம் வீண் வம்புக்குப் போகவேண்டும் போல் இருந்தது அவ்வேளையில் வயல்பக்கமாக இருந்த மாமரத்தைநோக்கிச் சோலைக்குயிலொன்று பறந்து வந்தது. மரக்கொப்பொன்றில் இருந்து கூவத் தொடங்கியது, ஆணவத்தை அடைத்திருந்த அந்த நாகத்திற்குக்குயிலின்இனிமையான ஓசை அடிவாங்கும் கழுதை கத்துவது போலிருந்தது.

ஆகவே அதைச் சகிக்கமுடியாமல் கர்வமடைந்தது. 'ஏய் குயிலே நீ இனிமையாகப் பாடி மற்றவர்களை மகிழ்விக்கிறாய்எனநினைக்காதே: அப்படித்தான் உனதுகுரலை இனிமையாக எடுத்துக் கொண்டாலும், நீ உனது பிறப்பின் ஆரம்பத்திலும், பின்னர் உன்வளர்ப்பிலும் செய்துகொள்ளும் தவறுகளை யார் செல்லிக்கொள்ளுகிறார்கள் இரவல் கூட்டில் முட்டைகளை இட்டு உனது இனத்தைப் பெருக்குகிறாய். தந்திரத்தில் சிறந்த காக்கையையே நீ ஏமாற்றுகிறாய். அதன்கூட்டில்கள்ள தனமாய் முட்டை இடுவது மாத்திரமல்ல, அவர்களைக் கொண்டே உனது குஞ்சுகளுக்கு உணவும் கொடுக்கச் செய்கிறாய்.

குஞ்சாய் இருக்கும்போது காக்கை குஞ்சுபோல் பாசாங்குசெய்து ஏமாற்றி அதன் அரவணைப்பில் சுகத்தைப் பெறுகிறாய். பின் பறக்கும்தன்மையடைந்ததும் கூட்டில் இருந்து வெளியேறும் குஞ்சுகளைப்பெற்றோர் என்று அணைக்கிறாயா? அல்லது ஒருபிடி உணவாவது கொடுத்து மகிழ்விக்கிறாயா? எனக்கென்னஎன்று மாற்றான்தாய்போல் அல்லவா நடக்கிறாய் இந்த வண்டவாளங்கள் தெரியாத கவிஞர், புலவர், எழுத்தாளர் எல்

தில் நடைபெறுகின்றன·

பின்னர் முதிர்ச்சி அடைந்ததும், இவ்வுணவுகளை வெறுக்கிறோம் புலால் உண்ணும்பழக்கத்தை அறவே விரும்பாமையினால் காக்கை அன்னையிடம் எமது குரலைக் காட்டியதும் அவர்கள் எங்களை விரட்டிவிடுகிறார்கள்: மீண்டும் நாங்கள் அவர்களுக்கு இடைஞ்சல் கொடுக்காமல் தனியாகப் பழவகைகளைஉண்டு வாழ்கிறோம். எங்களால் எந்த உயிரினமும் இடைஞ்சல் படுவதும்இல்லை அல்லது நாம் எந்த உயிரையும்கொன்று உண்பதும் இல்லை. இதன்மூலம் 'தொட்டில்பழக்கம சுடுகாடுவரைக்கும்' என்ற பழமொழிக்குச் சவாலாக வளர்கிறோம்.

எம்மோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது நீ எவ்வளவுகொடூரமானவன். உன்னைக்கண்டாலே பயங்கரமாகவே இருக்கும். 'பாம்பென்றாலே படையும் நடுங்கும்.' என்பார்கள் உயிருடனே விழுங்கும் கொடூரமான செய்கையைச் செய்பவன் நீ உனது வாயிலே பிறரைத்துன்பப்படுத்தும் கொடூரமான நஞ்சையல்லவா கொடுத்துள்ளார்! இதையாவது நீ நன்கு அறிவாயா?

எம்மைக்குறைசொல்லும்நீ எங்கு வாழ்கிற ய்? பல வருடகாலம் தமது உழைப்பால் கட்டிய கறையானின்வீட்டில் அத்துமீறிக் குடியிருந்து கொண்டு அவர்களையும்,

# ஆட்சிக் காலத்தில் தீர்வு குறித்து அரசு அக்கறை காட்டாதது ஏன்?

### வாசுதேவா கேள்வி

[வவுனியா]

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனது ஆட்சிக் காலத்தில் தீர்வுத்திட்டம் பற்றி அக்கறை காட்டாது பாராளுமன்ற தேர்தல் காலம் நெருங்கும் வேளையில் தூக்கத்தால் எழுந்த கும்பகர்ணன் போன்று செயற்படுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் அதிகாரப் பரவலாக்கல் உத்தேச அரசியல் யாப்பு சீர்திருத்தம் தொடர்பாக முழுமையான விபரங்களை வெளியிடாது தேர்தல் நெருங்கும் இவ்வேளையில் அரசு அவசர அவசரமாக செயற்படுவதுடன் தேர்தல் வெற்றிக்காக ஜனநாயக நடுவு நிலையையும் மீறி செயற்படுகிறது எனவும் வாசுதேவ நாணயக்கார குற்றஞ் சுமத்தியுள்ளார். (ந-8)

### இடம்பெயர்ந்தோருக்கான

# 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு இம் மாத நடுப்பகுதிக்குள்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி, வடமராட்சி மற்றும் யாழ்ப்பாணப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தோருக்கான இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவுகள் இம் மாதம் 15 ஆந் திகதிக்கு முன் வழங்கப்பட்டு முடிக்கப்பட வேண்டுமென கண்டிப்பான உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டோரின் பெயர் பட்டியலின் அடிப்படையில் இக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் எனவும் இதன் போது சம்பந்தப்பட்ட இராம உத்தியோகத்தர் சமுகம் கொடுக்க வேண்டும் என்றும் யாழ். செயலகத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.

வங்கிக் கணக்கு வைத்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் இடம்பெயர்ந்தோருக்கு மீளக்குடியமர்வு நிதி வழங்கப்பட்டமை ஏற்கனவே தெரிந்ததே. [க-வ]

# யாழ். பல்கலை கல்விசாரா ஊழியர் நேற்று அடையாள வேலை நிறுத்தம்

[யாழ்ப்பாணம்]

பல்கலைக்கழகங்களின் கல்வி சாரா ஊழியர்களின் நாடு தழுவிய போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக ஊழியர்களால் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் இடம்பெற்றது.

காலை 8.00 மணி முதல் பிற்பகல் வரை இடம் பெற்ற இப்போராட்டத்தில் சுமார் 200க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்குபற்றினர்.

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்திற்கு முன்னால் இடம் பெற்ற மேற்படி போராட்டத்தால் பல்கலைக்கழக செயற்பாடுகள் நேற்று ஸ்தம்பிதமடைந்தன.

பல்கலைக்கழகங்களில்கல்வி சாரா ஊழியர்களுக்கான 97ஆம் 98ஆம் ஆண்டுக்கான சம்பள நிலுவைகளை இதுவரை அரசாங்கம் வழங்காத காரணத்தாலேயே இப்போராட்டம் நடாத்தப்பட்டது.

இதே வேளை நேற்றைய அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தால் யாழ். பல்கலைக்கழக நிர்வாகச் நீர் விநியோகம், மின்சாரம் மற்றும் பாதுகாப்புக் கடமைகள் வழமை போன்று நடைபெற்றதுடன் விஞ்ஞான பீடத்தில் செய்முறைப் பரீட்சையும் நடைபெற்றது.

மேற்படி விடயம் தொடர்பாக கருத்து வெளியிட்ட யாழ். பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர் சங்கத்தலைவர் சி. கலாராஜ் அரசாங்கம் போர்ச்சூழலை காரணம் காட்டி இவ்வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தில் சம்பள நிலுவைக்கான நிதி ஒதுக்கவில்லை என்றும் இரண்டாயிரத்து ஓராம் ஆண்டு தான் நிலுவைகளை தரமுடியுமென தெரிவித்துள்ளது.

எனவே இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. போராட்ட மூலமே இதற்கு தீர்வு காண முடியுமென்று தெரிவித்தார்.

மேலும் இதற்கு நாம் கால அவகாசம் வழங்கி இருந்தோம். சாதகமான பதில் கிடைக்காமையால் தான்இவ் அடையாள வேலை நிறுத்தம் நடாத்த வேண்டி ஏற்பட்டது.

இந்நிலை நீடிக்குமால் ...

வெள்ளத்தின் மேல் நடடிக்கொண்டு நல்ல இடம் வரும்வரை வெள்ளத்தோடு வெள்ளமாகநீந்திக் கொண்டு சென்றது. ஒரு வயற்கரையை அடைந்ததும் மெதுவாகத் தண்ணீரில் இருந்து வெளியே வந்து ஒரு வரம்படியில் சற்று இளைப்பாறியது. அக்கிராமம் எப்படிப்பட்டதோ தெரியாது என்ற சிந்தனையுடன் எப்படியும் முதலில் தப்பித்துக் கொள்வதற்காகப் பாதுகாப்பான இடமொன்றை தெரிவு செய்யசற்றுஅவதானத்துடன் பார்த்ததுமழைவந்த அதிர்ஷ்டம் போலும் பெரிய கறையான் புற்று ஒன்று வரம்பின் முடிவில் இருப்பதைக் கண்டு அங்கு சென்று பலவழிகளிலும் அதுவசதியாக இருப்பதைப் பார்த்து மகிழ்ந்துஇனி எனக்கு நல்லகா ம் பிறந்துள்ளது எனவும் எண்ணி மகிழ்ந்தது.

இப்படியாகப் பலநாட்கள் ஓடின. முன்னயஊரைப் போல் கீரியின் நடமாட்டமே இல்லை. அதற்கு விருப்பமான உணவுகளாகிய எலிகள், தவளைகள் போன்றன தாராளமாகக் கிடைத்தன. பயமின்றி உணவு உண்ணக்கூடிய நிலை மற்றும் பிராணிகள்தன்னைக் கண்டு ஒதுங்கியமை போன்ற செயல்களால் பாம்புக்கு மென்மேலும் மகிழ்ச்சிபொங்கியது, இதனால் தேகமும் ஒளுகுளு என்று வளர்ந்தது, படமும் பெருத்தது, சிலவேளை, படத்தை விரித்தும், பயங்ரமாகச் சீறியும் காட்டியது.

எல்லாம் நல்லபடியாக அமையவே பாம்புக்குப் பழைய நினைவுகள் மறையத் தொடங்கின, இடப்பெயர்

தைப் பெறுகிறாய். பின்பறக்கும்தன்மையடைந்ததும் கூட்டில் இருந்து வெளியேறும் குஞ்சுகளைப்பெற்றோர் என்று அணைக்கிறாயா? அல்லது ஒருபிடி உணவாவது கொடுத்து மகிழ்விக்கிறாயா? எனக்கென்னஎன்று மாற்றான்தாய்போல் அல்லவா நடக்கிறாய் இந்த வண்டவாளங்கள் தெரியாத கவிஞர், புலவர், எழுத்தாளர் எல்லோரும் உனதுகுரலை வர்ணித்து எத்தனையோ படைப்புக்களை ஏற்படுத்தியுள்ளனரே! குரல்வளத்தை வைத்துக்கொண்டு நீ நல்லவன் என்றுமட்டும் எண்ணாதே. என்று ஏளனமாகக் கேட்டது.

இதைக்கேட்டகுயில் மூக்கு வெட்டபட்ட சூர்ப்பனகை போல் அவமானப்படவில்லை 'நாகமே! நீசொல்வது உண்மைதான் இவ்வளவும் நாங்கள் செய்தாலும் நீதியாகத்தான் நடக்கிறோம். மற்றவர்களின்வீட்டில் முட்டையிடுகிறோம் ஆனாலும்அவ்வீட்டை முற்றாகக் கைப்பற்றுவதில்லை. அல்லது அவ்வீட்டுக்காரரைக்கலைப்பதும்இல்லை முட்டையிடுவதற்குக்குறிக்கப்பட்ட நாட்கள் மாத்திரம் தான் அதைப் பயன்படுத்துவோம் பின்னர் வெளியேறி உரியவர் அனுபவிக்க விடுகிறோம். குஞ்சுகளாய் காக்கையின் அரவணைப்பில் இருக்கும்போது அவர்களின் பிள்ளைகளாகவே வாழ்கிறோம்; அவர்கள் கொடுக்கும் பூச்சி, புழுக்கள், மற்றும் அழுகிய மாமிசங்களை எமது சகோதரக் காக்கைக் குஞ்சுகளுடன் மகிழ்வோடு உண்ணுகிறோம். இவ்வளவும் எமது அறியாமைப்பருவத்

படுத்தும் கொடூரமான நஞ்சையல்லவா கொடுத்துள்ளார்! இதையாவது நீ நன்கு அறிவாயா?

எம்மைக்குறைசொல்லும்நீ எங்கு வாழ்கிற ய்? பல வருடகாலம் தமது உழைப்பால் கட்டிய கறையானின்வீட்டில் அத்துமீறிக் குடியிருந்து கொண்டு அவர்களையும், அவர்கள்பாதுகாப்பாக வைத்திருக்கும் இராணியையும் கொன்று ஏப்பம் விடுகிறாய். அவர்களின்இனத்தையே அடியோடு அழித்துவிடுகிறாய் உன்னால் தீண்டப்பட்டவர்கள் தப்புவதே அத்திபழுத்தல்போலிருக்கும் இவ்வளவு கொடூரமான ஒரு உயிரினத்தைக் கடவுள் ஏன் படைத்தார் என்பதுதான் புரியவில்லை. இதனுடன் பேசிக்கொண்டிருப்பதே வீண் நேரம்எனக்கூறி உற்சாகமாகப் பாடிக்கொண்டு பறந்து சென்றது.

இதைப்பார்த்த கருநாகம் மிகவும் கோபத்துடன் படமெடுத்துச் சீறியது. ஆனாலும் சிறிது நேரத்தில் தனது செயல்களைச் சிந்தித்து வெட்கமடைந்தது எனதுவாழ்க்கையோடு பார்க்கும் போது குயிலின் நிலை எவ்வளவு மேல் என எண்ணியது.

மற்றவர் செய்யும் சிறிய பிழைகளைக்கூடச் சீர்தூக்கி ஆராயும் அளவிற்கு நாம் செய்யும் பெரிய பிழைகள் எங்கள் கண்களிற்குப்புலப்படுவதில்லை எம்மை நாமாகவே திருத்திக் கொள்ள வேண்டும்.

(த)

**தென்கச்சி சுவாமிநாதன்**

பல்கலைக்கழகங்களில்கல்விசாரா ஊழியர்களுக்கான 97ஆம் 98ஆம் ஆண்டுக்கான சம்பள நிலுவைகளை இதுவரை அரசாங்கம் வழங்காத காரணத்தாலேயே இப்போராட்டம் நடாத்தப்பட்டது.

இதே வேளை நேற்றைய அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தால் யாழ். பல்கலைக்கழக நிர்வாகச் செயற்பாடுகள் யாவும் ஸ்தம்பிதமடைந்தபோதிலும், அத்தியாவசிய சேவைகளாகிய ... முடியாது. போராட்ட மூலமே இதற்கு தீர்வு காண முடியுமென்று தெரிவித்தார்.

மேலும் இதற்கு நாம் கால அவகாசம் வழங்கி இருந்தோம். சாதகமான பதில் கிடைக்காமையால் தான்இவ் அடையாள வேலை நிறுத்தம் நடாத்த வேண்டி ஏற்பட்டது.

இந்நிலை நீடித்தால் எமது போராட்டம் மேலும் விஸ்தரிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (க-3)

# உத்தேச சட்டமூலம் சமர்ப்பிப்பு அரசியல் உள்நோக்கைக் கொண்டது

## ஜோசப் பரராஜசிங்கம் எம். பி.

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி அரசினால்சமர்ப்பிக்கப்பட்டஉத்தேசஅரசியல்யாப்பு நகலானது தேர்தல் சமயத்தில் ஜனாதிபதி சமர்ப்பிப்பதானது அரசியல் உள்நோக்கம் கொண்ட ஒன்று என தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர் ஜோசப் பரராஜசிங்கம் எம். பி. தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; உத்தேச நகல் சட்ட மூலமானது சமர்ப்பிக்கப்படுவதற்கு போதிய கால அவகாசம் இருந்தும் தற்போது இதுவிடயத்தில் ஜனாதிபதி தீவிர அவசரம் காட்டுவதற்குசர்வதேச அழுத்தமும் ஒரு காரணமாகும் என்றும் தெரிவித்தார்.

ஆனால் அரசுதரப்பில்மேற்படி சட்ட மூலமானது பல்வேறு கல்வியாளர்கள், மத அமைப்பினரின் அபிப்பிராயங்களுக்கேற்ப தயாரிக்கப்பட்டது; மட்டுமல்லாமல் தேவையான திருத்தங்கள் மேற்கொள்வதற்கும்,போதிய கால அவகாசம் தேவைப்பட்டது. என்றும் கூறப்பட்டுள்ளது. (க-52)

# 80 குடும்பங்கள் மீளக் குடியமர்வு

(கரவெட்டி)

அண்மையில்ஏற்பட்டயுத்த அனர்த்தங்கள் காரணமாக இடம்பெயர்ந்து கரவெட்டி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில்தங்கியிருக்கும்சாவகச்சேரி, கோயிற் குடியிருப்பைச் சேர்ந்த80 குடும்பங்கள் உயர்தரப் பரீட்சையை முன்னிட்டு வல்வெட்டித்துறையில் குடியமர்த்தப்பட்டுள்ளன.

இவர்களிற்கான தங்குமிட வசதி, போக்குவரத்து வசதி என்பனவற்றை சமூகத் தொண்டர் நிறுவனங்கள் மேற்கொண்டுவருகின்றனர்; (த-21)

# சீனா,குடியேற்றத்துறை அதிகாரிகள் மீது அஸிற் வீச்சு 40 பேர் பலி

(பீக்கிங்)
சீனாவில் இருந்து கொங்கொங்கில் குடிபுகுந்து வாழ விருப்பம் கொண்டோர், மறுகுடியேற்றத்துறை அதிகாரிகள் அலுவலகம் மீது தாக்குதல் மேற்கொண்டதில் 40 பேர் கொல்லப்பட்டனர்.

சீனாவில் இருந்து கொங்கொங்கில் குடிபுகுந்து வாழ உரிமை வேண்டும் என கோரி வந்த குழு ஒன்று, அங்கே தங்கி வசிக்கும் அந்தஸ்து மறுக்கப்பட்டதால், எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தியதாகவும், மறு குடியேற்ற அதிகாரிகள் மீது எளிதில் பற்றக்கூடிய திரவத்தை ஊற்றி அவர்களுக்கு தீவைத்ததாகவும் கொங்கொங் சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் 16 அதிகாரிகள் காயமடைந்திருப்பதாகவும் மூவரின் நிலைகவலைக்கிடமாய் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை,

மூன்று ஆண்டுகளுக்குமுன், முன்னாள் பிரித்தானிய காலனித்துவ நாடான கொங்கொங் மீண்டும் சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டபின் அங்கு யார் குடியேறுவது என்பது சீனாவுக்கு தீர்வுகாண முடியாத பிரச்சினையாக இருந்து வருகிறது. (உ)

## ஐ. நா. பொருளாதாரத் தடையை நீக்கினால், ஈராக் முன்னேறும்

(பாரிஸ்)
ஐ. நா. சபை ஈராக் மீது விதித்துள்ள பொருளாதாரத்தடை கொடூரமானது அது முடிவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்று பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார்.

ஈராக் குவைத் மீது தாக்குதல் தொடுத்த 10-ஆவது ஆண்டு பூர்த்தி தினத்தை ஒட்டி பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஈராக் மீது ஐ. நா. விதித்த பொருளாதாரத் தடையைத் தொடர்ந்து மேற்கொள்வது அந்நாட்டுச் சமூகத்தை மிகவும் சீரழிக்கின்றது. இப்பொருளாதாரத் தடை மிகவும் கொடுமையானது. எனவே இத்தடை நீக்கப்படவேண்டும் என அமைச்சர் தெரிவித்தார். (து)

## உலக தரிசனம்

## ஏவுகணைகள், குண்டுகள்சகிதம் வந்தாலும் என்னைப் பிடிக்கமுடியாது

### வீரப்பன் சவால்

(பெங்களூர்)
ஏவுகணைகள் மற்றும் அணுகுண்டுகள்சகிதம் வந்தாலும் என்னைப்பிடிக்கமுடியாது என சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பன் தமிழக அரசிற்கு சவால் விட்டுள்ளார்.

ஒலிநாடாமூலம் மேற்படி தகவலை அனுப்பிய அவர் இம்முறை தனது கோரிக்கை ஏற்கப்படாவிட்டால் பணயக்கைதியாக பிடித்து வைத்திருக்கும் கைதிகளை கொலை செய்ய தயங்கமாட்டேன் என்றும் மிரட்டியுள்ளார்.

கன்னடநடிகர் ராஜ்குமார் பெங்களூரில்உள்ள அவரது இல்லத்தில்வைத்து சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பனால் சிலதினங்களுக்குமுன் கடத்திச்செல்லப்பட்டமையைஅடுத்து மேற்படி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் வீரப்பனை சந்திப்பதற்காக சென்ற நக்கீரன் இதழ்ஆசிரியர் கோபால் எல்லைப்பகுதிக்காட்டிற்குள் சென்றமை ஏற்கனவே தெரிந்ததே. (க.து)

## இந்தியாவில் வெள்ள அனர்த்தம்

இந்தியாவில் இமாலயப் பிரதேசத்தில் ஏற்பட்ட பெரும் வெள்ள அனர்த்தத்தில் 150 இற்கும் மேற்பட்டோர் பலியாகியிருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

குன்னூர், மண்டி, சிம்லா உட்பட்ட பகுதிகளிலேயே இவ் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

25 சடலங்கள்இதுவரையில் மீட்கப்பட்டதாகவும் மீட்புப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## ஜப்பானில் பாரிய வெடிவிபத்து 50 பேர் காயம்; 160 வீடுகள்சேதம்

[ரோக்கியோ]
ஜப்பானின் மத்திய பகுதியில் தொழிற்சாலைக் களஞ்சியம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 50 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் 160 வீடுகள் சேதமடைந்தன.

இந்தப்பாரியவெடி விபத்துக் குறித்து காரணம் எதுவும்இதுவரையில்அறியப்படவில்லை.

நானூறிற்கும் மேற்பட்டோர் பணி புரியும் இந்தக் களஞ்சியத்தில் டைனமற் வெடி மருந்துகள்வைக்கப்பட்டிருந்தன வென்று தெரிவிக்கப்படுகிறது. [து]

## திமிங்கிலம் வேட்டையாடும் ஜப்பானியர் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(வாஷிங்டன்)
ஜப்பானியர் மேற்கொண்டுவரும் திமிங்கில வேட்டையை உடன் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென அமெரிக்க செனட்சபை உறுப்பினர் ஒருவர், அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்தவாரம், வடபசுபிக் பகுதியில் பெரிய திமிங்கில ஜோடி ஒன்றினை ஜப்பானியர் வேட்டையாடியதை அடுத்தே இக்கோரிக்கை எழுந்துள்ளது.

ஜப்பானியரின் இத் திமிங்கில வேட்டையைப் பிரிட்டன் மற்றும் சூழல் பாதுகாப்பு அமைப்புகளும் கண்டித்துள்ளன. (உ)

## அமர்நாத் புனித யாத்திரிகர் மீதான தாக்குதல் பாகிஸ்தானின் சதிகாரவேலை

### இந்தியா குற்றச்சாட்டு

புதுடில்லி)
இந்தியக்கட்டுப்பாட்டுகாஷ்மீர் பகுதியில் அமர்நாத் புனித யாத்திரை செல்லும் இந்து யாத்திரிகர்கள் பயன்படுத்தும்வழிமீது இடம் பெற்ற தீவிரவாதிகளின் தாக்குதல், பாகிஸ்தான் அரசின் நாசகார திட்டங்களில் ஒன்றென இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி குற்றம் சாட்டியுள்ளார்.

பாகிஸ்தான் நாட்டின் அனுசரணையுடன் காஷ்மீர் பிராந்தியத்தில் தீவிரமாக இயங்கிவந்த முக்கியமான தீவிரவாத ஹிஸ்புல் முஜாகுதீன் அமைப்பு அமைதி வழிக்குத் திரும்பியிருப்பதை குழப்பும் நடவடிக்கையாகவே இது அமைந்துள்ளதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேசமயம், அமர்நாத் புனித யாத்திரிகர்கள் மீது மேற்கொண்ட தாக்குதலில் 39 பேரும், வேறுஇடங்களில் தீவிரவாதிகளால்மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு மற்றும் தாக்குதல் சம்பவங்களில் 50 இற்கும் மேற்பட்டோரும் கொல்லப்பட்டிருப்பதாய் தற்போது இடைத்துள்ள செய்திகள் தெரிவித்துள்ளன.

இதனையடுத்து சம்பவம் நடைபெற்ற இடமான பகல்காம் எனும் கிராம மக்கள், உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து வருவதாகவும், காஷ்மீர் பிராந்தியத்தில் தங்கிநின்ற வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகள் உடனடியாகவே வேறு இடங்களுக்குத் திரும்பிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இத்தீவிரவாத நடவடிக்கை தொடர்பாக, அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டன் தொலைபேசியில் பிரதமர் வாஜ்பாயுடன் தொடர்பு கொண்டு கவலை வெளியிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## காஷ்மீர் பேச்சுவார்த்தைக்கு இந்திய உள்துறை செயலர்கள் விரைவு

(புதுடில்லி)
ஹிஸ்புல் முஜாகுதீன் தீவிரவாத இயக்கத்துடன் விவாதிக்க மத்திய உள்துறை செயலர் கமல்பாண்டே தலைமையிலான இரண்டு உறுப்பினர் கொண்ட குழு நேற்று காலை ஸ்ரீநகர் புறப்பட்டுச் சென்றுள்ளது.

ஹிஸ்புல் முஜாகுதீன் பிரதிநிதியான ஹக் குறேசியுடன் இந்தக் குழு பேச்சுவார்த்தை நடாத்தும் என்று அரசவட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் குழுவில் உள்துறை அமைச்சின் விசேட செயலர் எம். பீ. கௌசன் னும் கமல் பாண்டேயுடன் சென்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (து)

## செய்திப்பரல்

★ தீவிரவாத சீக்கிய இளைஞர்களை இந்தியாவிற்குத் திருப்பி அனுப்ப முடியாதென பிரிட்டன் அறிவித்துள்ளது.

★ காஷ்மீர் படுகொலைகளை இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் கண்டித்துள்ளார்.

★ மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில்குண்டு வைக்கப்பட்டுள்ளதாம்.

★ சிங்கப்பூரில் அபின் விற்றவர் கைது செய்யப்பட்டுள்ளார். குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு மரண தண்டனை கிடைக்கும்.

★ பிலிப்பையின்ஸ் தீவிரவாதிகள் இப்பொழுது வர்த்தகர்களையும் அவர்களது பிள்ளைகளையும் கடத்திவருகிறார்கள்.

★ புறூனே அமைச்சர்கள் சிங்கப்பூருக்குச் சென்றிருக்கிறார்கள். (து)

## தாக்குதல் நடத்திய அமெரிக்கருக்கு 8ஆண்டு சிறைத்தண்டனை கிடைத்தது

(வாஷிங்டன்)
அமெரிக்காவில் இந்தியர் ஒருவர்மீது கறுப்பினத்தவர் என்ற காரணத்தினால் இனவெறித் தாக்குதல் நடத்திய அமெரிக்கருக்கு 8 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்திய வம்சாவழியைச் சேர்ந்த மகாரஜ் 1998 செப்டெம்பரில் நீலோமாட்டின் என்பவரால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

இதுதொடர்பாகத் தொடரப்பட்ட வழக்கில் அமெரிக்கரான நீலோ பாட்டினுக்கு 8ஆண்டு காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இத்தகைய இனவெறித் தாக்குதல்களை அனுமதிக்க முடியாதென்று நீதிபதி ஒருவர் கருத்து வெளியிட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (து)

## பாகிஸ்தானில் மூன்று ஆண்டுகளின் பின் ஜனநாயக ஆட்சி உருவாகும்

### முஷாரப் தெரிவிப்பு

(இஸ்லாமபாத்)
பாகிஸ்தானில் இன்னும் 3 ஆண்டுகளின் பின்பே ஜனநாயக ஆட்சி உருவாகும் என பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர்வேஸ் முஷாரப் பீ.பி.சி.க்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர்களான பெனாசிர் பூட்டோ மற்றும் நவாஸ்ஷெரீப் எவராக இருந்தாலும் மீண்டும் அரசியலில் பிரவேசிக்கும் உரிமைகிடையாது.

வரும் மூன்று ஆண்டுகளுக்கிடையில் புதிய அரசியல் அமைப்பு ஒன்று உருவாக்கப்படும் எனவும் அப்பேட்டியில் பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர் தெரிவித்துள்ளார். (உ)

## கொலம்பிய அரசின், கொள்கைகளைக் கண்டித்து ஒருநாள் வேலைநிறுத்தப் போராட்டம்

(லண்டன்)
கொலம்பியாவில் பணி புரியும் 7 இலட்சம் அரசஊழியர்கள் ஒன்றிணைந்து, அந்நாட்டில் வேலையற்றிருப்போர் தொகை அதிகரித்துச் செல்வதைக் கண்டித்து நேற்றுமுன்தினம் ஒரு நாள் வேலைநிறுத்தப் போராட்டம் நடாத்தப்பட்டது.

தற்போதைய அந்நாட்டு ஜனாதிபதியின் இறனற்றநிர்வாகத்தையும் புதிய அரசியல் கொள்கைகளால் நாட்டிற்கேற்பட்டுள்ள பாதகங்களையும் சர்வதேச உலகிற்கு எடுத்துக் கூறுவதற்காகவே இவ் வேலை நிறுத்தப் போராட்டம் மேற்கொள்ளப்படுவதாய் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இவ்வருடத்தில் நடாத்தப்பட்ட 6 வது ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## அரசியல்வாதி சுட்டுக்கொலை

ஸ்பெயின் நாட்டின் லஸ் பிராந்தியத்தில் உள்ளூர் அரசியல்வாதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அப்பகுதியில் செயற்படும் ஈற்ற விடுதலை அமைப்பினர் சிற்றுண்டிச்சாலை ஒன்றில் வைத்து இவரைசுட்டுக்கொன்றுள்ளனர். (உ)

## இந்தியாவிற்கு அமெரிக்கா புகழாரம்

(வாஷிங்டன்)
இந்தியா, 21ஆம் நூற்றாண்டின் மிகப்பெரும் ஜனநாயக நாடாக உருவாகி வருவதாக அமெரிக்க குடியரசுக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளது.

பல்கலை, கலாச்சாரம் கொண்ட இந்தியாவின் கொள்கைகள்பாராட்டத்தக்கவை எனவும் அமெரிக்க குடியரசுக்கட்சி இந்தியாவுக்குபுகழாரம் சூட்டியுள்ளது. (உ)

முறை செய்து காப்பாற்றும்
மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப்படும்.

குறள்

வலம்புரி

## இனவாதத்தால்

இந்த நாட்டிலே இனவாதத்தால் ஏற்பட்ட அழிவுகள் இன்று மட்டும் நிகழ்வதன்று கண்டிராச்சியத்தின் இறுதிநாயக்கவம்சத்து மன்னன் ஸ்ரீவிக்கிரமஇராஜசிங்கனின் வீழ்ச்சியும் இனவாதத்தால் ஏற்பட்டதொன்று. உள்ளியின் குணம் மாறாது என்பது போல இந்த மண்ணும் இனவாதம் தலைதூக்கிய மண். வாழ்வியல் சறுக்கல்களுக்கு இனவாதமே மூலகாரணம் என்பதை இன்று வரை உணர முடியாது தத்தளிக்கின்றார்கள். புத்தபகவானின் திருப்பாதம் பட்ட மண். பஞ்சசீலக் கொள்கை பொதித்த மண் என்றெல்லாம் போற்றப்படினும் அப் பெருமானார் பெயரால் மதம் பரப்பும் மதவாதிகள் மதம் தலைக்கேறிப்பிதற்றுவதும் வேண்டாத துறையில் கால் ஊன்றுவதும், மனிதனை மதிக்கின்ற மனிதம் இல்லாதிருப்பதும் தான் மனதுக்குக் கவலை.

ஈழத்தில் இன்றைக்குத் தான் மண்ணை நிருவகிக்கத் தமிழன் தலைப்படுகிறான் என்றில்லை. மன்னாதி மன்னர்களாக நீதியின் நிலைக்களன்களாக, பொறுமை பொதிந்த, மனிதம் நிரம்பிய மாண்பினர்களை வரலாறு எடுத்தியம்பும்.

இது இவ்வாறிருக்க தமிழன் தனக்குள்ளே நெல்லிக்காய் மூடைபோல நிலைகெட்டு, தறிகெட்டுத் தடுமாறுவது தான் வேடிக்கை. தங்கள் பலவீனங்களை விமர்சித்து மாற்றானுக்குக் காட்டிக் கொடுக்கும் அவலநிலை மட்டும் இல்லையென்றால் எங்கள் வாழ்வு வளம் மிக்க ஆட்சியில் மிதந்திருக்கும்.

மூன்று தசாப்தங்களாக

# வீண் வார்த்தைகள்; முறையற்ற செயற்பாடு

# ஆன்மீக முன்னேற்றத்திற்கு வித்திடாது

### சுவாமி விவேகானந்தரின் சொற் பொழிவிலிருந்து

இறைவனை வழிபடுவது அவன் ஒருவனை மட்டுமே வணங்குவது பக்தியாகும். வேறு எந்தப் பொருளையும் வழிபடுவதுபக்தியைச் சேர்ந்ததல்ல அது பக்தி அல்ல. பல்வேறுதேவதைகளைப் பல வழி வழிகளில் வணங்குவது சடங்குகளோடு கூடிய வழிபாட்டைச் சேர்ந்ததாகும். இந்த வழிபாட்டினால் வழிபடுபவன் மேலான ஓர் இன்பத்தை அடையலாமே தவிர, பக்தியைப் பெறவோ முத்தி பெறவோ இயலாது.

ஒவ்வோர் ஆன்மாவும் நிறைவினை, பரிபூரணத்தை அடைய வேண்டும் என்பதே அதற்கு விதிக்கப்பட்ட நியதியாகும்;

இப்போதுநமக்கு அமைந்துள்ள வாழ்க்கைமுந்திய பிறவியில் நாம் செய்த செயல்களின் பயனாக நாம் நினைத்த நினைப்புக்களின் பயனாக வந்திருக்கிறது. அதுபோலவே இனி மேல் வரப்போவதும் நாம் இந்தப்பிறவியில் செய்யும், செயல்களுக்கும், சிந்திக்கும் சிந்தனைகளுக்கும் ஏற்பவே அமையும். இவ்விதம் நாமே நமது விதியை நிர்ணயித்துக்கொள்கிறோம். நமது விதிக்கு நாமே காரணமாக இருக்கிறோம்.

விரைவில் செயற்படுத்தக் கூடிய ஆன் மீகத் தூண்டுதல நூல்களைப் படிப்பதனால்மட்டும் பெற முடியாது. ஓர் ஆன்மாவிடமிருந்துதான் மற்றோர் ஆன்மா இதைப்பெற முடியும் [illegible] பல முறை நம் வாழ்க்கையில் பார்த்திருக்கிறோம். அது நமக்கு பேரிடியாக வந்து வாய்க்கிறது. அப்போது உலகமே நம்கையிலிருந்து நழுவி விட்டதாக நினைக்கிறோம். இத்தகைய விரக்தி நிலையில் சாசுவதமான ஒன்றை, உயர்ந்ததான ஒன்றை நாம்பெரிதும்விரும்பி அதைத் தரக் கூடிய மதத்தில் ஈடுபாடு கொள்கின்றோம் ஆனால் ஒரு சில நாட்களுக்குள்ளேயே இந்த எண்ண எழுச்சிவற்றிவிடுகிறது. முன்பிருந்த பழைய நிலைக்கே திரும்பவும் போய் விடுகின்றோம்.

வேறு எதனிடமிருந்தும் பெற முடியாது. வாழ் நாள் முழுவதும் நூல்களைக் கற்கலாம் மாமேதைகளாக விளங்கலாம். ஆனால் முடிவில் நாம் உணர்வதெல்லாம், ஆன்மீக வாழ்க்கையில் நாம் ஒரு துளி கூட முன்னேறவில்லை. என்பதை தான்.

மிக உன்னத அறிவாற்றல் வளர, வளர கூடவே ஆன்மீக வாழ்க்கையும் உயருகிறது. என்று சொல்வதெல்லாம் உண்மையல்ல. நூல்களைக் கரைத்துக் குடிப்பது காரணமாக ஆன்மீக வாழ்க்கையிலும் முன்னேறியிருக்கிறோம் என்பதாக ஒரு பிரமை தடுமாற்றம் சில சமயம் நமக்கு ஏற்படுகிறது ஆனால் நூல்களைக் கற்பதனால் வரும் பயன் என்றுஅலசிப்பார்ப்போமேயானால், அந்த நூலறிவு முடிந்தவகையில் நமது மூளையைத்தான் ஓரளவிற்குக்கூர்மையாக்கி இருக்கிறதேதவிர, நமது ஆன்மீகத்திற்கு எந்த லாபத்தையும், வளர்ச்சியையும் தரவில்லை என்பதை அறிய முடியும் இதற்குக் காரணம் நூலறிவின் இயலாமையே ஆகும்.

ஒருவன் தன்னிடம் எழுந்துள்ள தற்காலிக உணர்ச்சியை உண்மையான ஆன்மீக வேட்கை என்று தவறாக நினைக்க கூடும் இது ஒரு பெரும் அபாயமாகும் இதை நம்மிடமே நாம் ஆராய்ந்து பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். நம்விருப்பத்திற்கு உரிய ஒருவர் திடீரென இறந்து

நாம் எல்லோருமே இத்தகைய தற்காலிகமான விரக்தி உணர்ச்சியைத் தான் உண்மையான அருள்தாகம் என்று தவறாக நினைக்கும் போக்கு நம்மிடம் இருக்கும் வரை தொடர்ச்சியாக உண்மை ஆன்மீக நாட்டம் தோன்ற முடியாது. நாம்ஆன்மாவைத் தூண்டி விடத்தக்க எவரையும் நம் பார்க்க முடியாது. எனவே நம்மிடம் தெய்வப் பற்று, ஆன்மீக வேட்கை உண்மையானது தானா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்த ஆராய்விற்குப் பிறகே பெரும்பாலானவர்கள் தங்களிடம் ஆன்மீகச் சக்தியைப் பெறுவதற்கு உரிய தகுதி இன்னும் ஏற்படவில்லை உண்மையான அருள் தாகம் எழவில்லை. என்பதைக் கண்டு கொள்வர்.

வண்டி வண்டியாக வீண் பேச்சுக்களைப் பேசுவதைக் காட்டிலும், முறையற்ற உணர்வுகள் பலவற்றை வளர்த்துக் கொள்வதைக் காட்டிலும் எள்ளத்தனை அறநெறியையும். ஆன்மசாதனையும் செய்வது எவ்வளவோ மேலானது;

இயற்கை வகுத்த அதிசய விதிப்படி வயல்உழுது முடித்த பின் விதைப்பது நடந்தே தீரும் அதுபோல ஆன்மா இறைவனை உளமாரத் தேடித்திரியும் போது ஆன்மீக ஒளியைப் பாய்ச்சக்கூடிய குருவந்தே தீருவார்.

எங்கே இறைவனின் திருப்பெயர்கள் ஓதப் பெறுகின்றனவோ அந்த இடம் புனிதமடைகிறது. அப்படியானால் இறைவனுடைய திருநாமத்தை எப்போதும் ஓதி வருகிறவனே பக்தன்; அவன் இன்னும் எவ்வளவு புனிதம் வாய்ந்தவனாகஇருக்கவேண்டும். அவனிடமிருந்தல்லவா நமக்கு ஆன்மீக உண்மைகள் வருகின்றன. எனவே அந்த மகானை மிகுந்த மதிப்போடும் பயபக்தியோடும் நாம் அணுக வேண்டியது அவசியமாகிறது. சிறந்த உண்மைகளைக் கூறும் ஆசான்கள் உலகில் மிகச் சிலரே இருப்பினும் இத்தகைய மகான்கள் உலகில் இல்லாத காலமே இல்லை என்று சொல்லலாம் மனித வாழ்க்கை என்றபசுஞ்சோலையில் மலர்ந்த வாடா மலர்கள் அன்றோஇவர்கள்:

உங்கள் இதயக் கதவுகளை நன்றாகத் திறந்து வைத்துக் கொள்ளுங்கள்.

உண்மையின் தெள்ளிய ஒளிக்கதிர் உள்ளே நுழையட்டும். தாங்கள் பேசியதை முன்னரே உணர்ந்து அனுபவித்த மாமேதைகளான நம் பண்டைய முனிவர்களின் காலடிகளில் நாம் குழந்தைகள் போல் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கருத்துடன் கேட்போமாக.

(நன்றி ஈழநாடு ஜூலை 1985ஆம் ஆண்டு)

## வெள்ளி நற்சிந்தனை

# சிந்தியுங்கள் செயல் பயனாகும்

தெய்வ சித்தமில்லாத விடத்துப் பொருளோமற்றும் நிபுணரான வைத்தியரோ எம்மைக்காப்பாற்றமுடியாது. ஆகவே, யாம் செய்ய வேண்டியது யாது? என்ற வினா எம் ஆன்மாவில் எழுகிறது.

கடவுளைதிருப்திப்படுவதற்குத்தான் நாம் நடக்க வேண்டும். போற்றுவதாயின் அவரையே போற்ற வேண்டும்.

கடவுளால்வருந்துணையேஉண்மையானதுணை கடவுளின் துணையாரும் ஒருவர் வழியால்வரும். ஆகையால், முறிந்த நாணற் புல்லைப்போன்று ஒருவரென அறிந்திருந்தும்அவரை துணையென நாடாதிருப்பதே மேல்.

# கம்பகா ரயில்நிலையம் முன்பாக இடம்பெற்ற ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

உத்தேச அரசியலமைப்பு நகல் சட்டமூலம் ஏற்றுக் கொள்ளவேண்டுமெனக் கோரி கம்பகா ரயில்நிலைய முன்றலில் அண்மையில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் கல்வியாளர்கள் உட்பட 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். [வ-க]

# உத்தேச அரசியலமைப்புச் சட்டமூலத்தில்

காட்டிக் கொடுக்கும் அவல நிலை மட்டும் இல்லையென்றால் எங்கள் வாழ்வு வளம் மிக்க ஆட்சியில் மிதந்திருக்கும்.

மூன்று தசாப்தங்களாக இழுபடும், உணரப்படாத உரிமைப் போராட்டம் தந்த வரலாற்று வடுக்கள் மாறா ரணங்களாக வேதனை தருகின்றன. இன்று பிறக்கும் நீதி நாளை பிறக்கும் நீதி என்று எண்ணி ஏம்பலிக்கும் எம்மனோர்க்கு முதலும் கடையுமாக இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். அரை வேக்காடான தீர்வு வேண்டியதில்லை.

சர்வதேசமயப்பட்ட பிரச்சினையாக தமிழர் தம் பிரச்சினை இன்று சுவாலித்து எரிகிறது இதனை அணைக்க எத்தனை தந்திரங்கள். விழித்துக் கொண்ட தமிழனை ஏமாற்ற முடியாதென்ற உணர்வு புரியாமலில்லை. அழுகின்ற குழந்தைக்கு மிட்டாய் காட்டி ஏமாற்ற நினைப்பது தவறு. முடியாததும் ஒன்று.

ஜனாதிபதி அம்மையார் சீர் திருத்தம் ஒன்றை தமிழனுக்கு சீர்வரிசை போல் முன்வைத்திருக்கிறாரோ?

**அன்புடன் ஆசிரியர்**

வேண்டும். போற்றுவதாயின் அவரையே போற்ற வேண்டும்.

கடவுளால்வருந்துணையேஉண்மையானதுணைகடவுளின்துணையாரும் ஒருவர் வழியால்வரும். ஆகையால், முறிந்த நாணற் புல்லைப்போன்று ஒருவரெனஅறிந்திருந்தும்அவரை துணையெனநாடாதிருப்பதே மேல்.

யாரும் பொய்யனென்றாலும், எம்மை விரோதித்தாலும் சினமெழாது காத்துக் கொள்ள வேண்டும்.

ஏதுஞ் சொல்ல விரும்பினால் அமைதியுடன் சொல்ல வேண்டும். மௌனமே அப்போதைக்கு ஆகச் சிறந்ததாயிருக்கலாம். நாம் உண்மை தவறவில்லையாயின், மற்றவர் எம்மை பொய்யெனக் கூறுவதால் நாம் பொய்யனாக மாட்டோம்.

கண்களை இழந்து வாழ்பவன் உண்மையில் குருடனல்ல. எவன் உண்மையிலே தன்னிடமுள்ள குறைகளை மறைக்க முயல்கின்றனோ அவனே குருடன் ஆவான்.

நீதியான இலட்சியத்தைக் கொண்ட முயற்சிகள் ஒரு போதும் எம்மைத் தோல்வியின் பாதையில் இட்டுச் செல்வதில்லை. சத்திய வாக்கின் பயனாய் எவருமே முடிவில் புண்பட்டதாய் சரித்திரமில்லை.

தூயவுள்ளம் உடையவரால் நல்வழியில் வாழ்ந்தவர்கள் கூறிய சொல் என்றும் வீணாகாது.

மனஅடக்கத்தை அதிகம் உடையவர்களும், வேலையில் முழுக்கவனமும் செலுத்தி நிற்பவர்கள் வாழ்வில் மிகக் குறைவாகவே பேசுவார்கள் பேச்சுக் கூடினால் செயல் குன்றும் செயல் கூடினால் பேச்சுக் குன்றும்.

இதனையே பகவத் கீதையில் கூட கிருஷ்ண பகவான் ''செயலில் செயலின்மையும் செயலின்மையில் செயலையும் காண்பவனே வீரன்'' என்று கூறினார்.

இயற்கையைப் பாருங்கள் இடைவிடாது தொழிலாற்றிக் கொண்டும், என்றாவது ஓய்வெடுக்காமலும், என்றும் மௌனமாகவுமல்லவா அது இயங்குகிறது. இந்த இயற்கையின் செயற்பாடு கூட மனிதனுக்கு இறைவனால் வழங்கப்பட்ட கொடை, படிப்பனவு என்பது கண்கூடு.

**தர்மினி**

கோரி கம்பகா ரயில்நிலைய முன்றலில் அண்மையில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்று 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். [வ-க]

# உத்தேச அரசியலமைப்புச் சட்டமூலத்தில் பௌத்த மதத்திற்கு இடம் உண்டு

## அரசு அறிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக தற்போதைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முன்வைத்துள்ள உத்தேச அரசியல் அமைப்புச் சட்ட மூலத்தில் பௌத்த மதத்திற்கு உரிய இடம்வழங்கப்பட்டுள்ளதாகதெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியல் யாப்பிலிருந்து பௌத்த சமயம் பற்றிய பிரிவு முற்றாக நீக்கப்பட்டுள்ளது என்று சிலசக்திகள் தெரிவித்த கூற்று முற்றிலும் தவறானது என்று மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பௌத்த மதப் பாதுகாப்பு வளர்ச்சி தொடர்பான சரத்து 1972ம் ஆண்டு குடியரசு அரசியல் யாப்பில் சேர்க்கப்பட்டதுளனவும், பின்னர் 1978ம் ஆண்டு அரசியல் யாப்பில் விஸ்தரிக்கப்பட்டு தற்போது மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரப் பரவலாக்களின் கீழ் பௌத்த சமயம் சம்பந்தமான நடவடிக்கைகள் மத்திய அரசிடமே இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-02)

## நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கல்வியற்கல்லூரியில்பயிற்சியை முடித்து வெளியேறிய கீழே பெயர் குறிப்பிடப்பட்டவர்களை தேசியபாடசாலைக்கான நேர்முகப் பரீட்சைக்காக இன்று வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்திற்கு வருகைதருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

01) செல்வி எஸ். விஜிதா, வளவிலேன், தும்பளை, பருத்தித்துறை.
02) திரு. ஜி. ஸ்ரீ கனேஸ் ஏழாலை வடக்கு, ஏழாலை,
03) திரு. பி. சிவகுமாரன் மே/பா, திரு. ஐ. பூரணச்சந்திரன் பிள்ளையார் கோயில் வீதி, பத்தமேனி அச்சுவேலி. (செ)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலகத்துறைப் படிப்பகம்

## "மீண்டும் ஒரு சீதை"

### செங்கைஆழியானுக்கு முதற் பரிசு

அமரர் ராமரத்தினம் நினைவாக கலைமகள் நடத்திய குறுநாவல் போட்டியில் ஈழத்தின் பிரபல எழுத்தாளர் செங்கைஆழியான் [கலாநிதி க. குணராசா] எழுதிய ''மீண்டும் ஒரு சீதை?' என்னும் குறுநாவலுக்கு முதலாம் பரிசு கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் குறுநாவல் போட்டியில் ஏராளமான தமிழக முன்னணி எழுத்தாளர்கள் பலர் கலந்துகொண்ட போதும் ஈழத்தில் இருந்து செங்கை ஆழியான் எழுதிய குறுநாவலை சென்னைத் தொலைக்காட்சி நிலைய முன்னாள் இயக்குனர், திருமதி அகிலா சிவராமன், இலக்கிய வீதி அமைப்பாளர் இனியவன் பத்திரிகையாளர், எழுத்தாளர் சாருகேசி ஆகியோர் முதலாம் பரிசுக்குரிய குறுநாவலாக தெரிவு செய்துள்ளனர்.

செங்கைஆழியான் யாழ்ப்பாண பல்கலைக் சழகப் பதிவாளராக இருந்தபோது இக் குறுநாவலை எழுதியுள்ளார்.

தற்போது நல்லூர் பிரதேச செயலராகக் கடமை ஆற்றிவரும் செங்கைஆழியானுக்கு முதலாம் பரிசாக இந்தியப்பணத்தில்ஆறாயிரம் ரூயாவைப்பெறுகிறார். [வ]

# புதிய தேர்தல் திருத்த சட்டமூலம்

# 17-ல் பா.மன்றில் சமர்ப்பிக்கப்படும்!

(கொழும்பு)

தற்பொழுது நடைமுறையில் இருக்கும் தேர்தல் முறையை மாற்றியமைப்பதென நேற்றுக் கூடிய அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்தில் தேர்தல் திருத்தச்சட்டமூலத்தை இம்மாதம் 17ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய தேர்தல் திருத்த சட்டமூலத்தின் பிரகாரம் தொகுதி வாரியாக 168 எம். பிக்களும் மாவட்டமட்டத்தில் 50 எம். பிக்களும் மிகுதி போணஸ் எம். பிக்களும் தெரிவு செய்யப்படவுள்ளனர். [வ]

## சிகிச்சை அளிப்பதில் பாகுபாடு நோயாளர் வன்னி திரும்புகின்றனர்

(வவுனியா)

மல்லாவி மருத்துவமனையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நோயாளர் சிலர் சிகிச்சை எதுவும் அளிக்கப்படாதநிலையில்மல்லாவிக்கே திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை இவர்களுடன் சென்ற நோயாளர்களில்பலர் சிகிச்சை எதுவும் அளிக்கப்படாமையினால் அவர்கள் மல்லாவிக்கே திரும்பும் நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-7)

## புதிய ஆணையாளர்

[திருமலை]

வடக்குக் கிழக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளராக எஸ். சுட்பிரமணிய சர்மா ஆளுநரால் நியமனம் பெற்றுள்ளார்.

இவர் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் செயலாளராகவும், திருகோணமலை உதவி அரசாங்க அதிபராகவும் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. [வ]

## செயலக அதிகாரியின் போலிக் கையொப்பத்துடன் மண்ணெண்ணெய் பெறப்பட்டதா?

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபன, வடபிராந்திய நிலையம் மே, ஜூன், ஜூலை மாதங்களில் யாழ். குடாநாட்டு மக்களுக்கு சுமார் 23 லட்சத்து 35 ஆயிரத்து இருநூறு லீற்றர் மண்ணெண்ணெயை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும், தனியார் எரிபொருள் விற்பனை முகவர்கள் மூலமாகவும் வழங்கியுள்ளதாக வடபிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள 24 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சுமார் 19 லட்சத்து 35 ஆயிரத்து இருநூறு லீற்றரும், தனியார் எரிபொருள் விற்பனை முகவர்களுக்கு சுமார் 4லட்சம் லீற்றர் மண்ணெண்ணெயும் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம்முதல் தனியார் எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு மண்ணெண்ணெயை, வழங்கிய பின் பாவனைகளுக்குத் தாராளமாகக் கிடைப்பதுடன் தெருவோர மண்ணெண்ணெய்விலை லீற்றர் 50ரூபாவில் இருந்து 25, ரூபாவாக குறைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை யாழ். செயலக உயர் அதிகாரி ஒருவரின் போலிக்கையொப்பத்துடன் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் பெயருக்கு மண்ணெண்ணெய், டீசல் ஆகியவற்றை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் பெற்று கறுப்புச் சந்தையில் விற்பனை செய்யப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

## ஐ தே-கட்சியினர்...

மூலநகல் பிரதிகளைபாராளுமன்றத்தில் கிழித்தெறிந்துமதகாத வார்த்தைகளைப் பிரயோகித்தும் அதனை தீயிட்டும் கொழுத்தினர் இச்செய்கையை ஐ.தே கட்சியின் இதர எம். பிக்களில் சிலர் வன்மையாக கண்டித்தனர்.

இதேவேளை ஜனாதிபதி உரையாற்றிக் கொண்டிருக்கும் போது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சபையை விட்டு வெளியேறிச் சென்ற போது பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சித் தலைவர் இப்படிச் சபையை விட்டு வெளியேறலாமா என்று ஜனாதிபதி வினாவை எழுப்பியதுடன் ரணிலின் இச்செய்கையானது சந்தேகத்துக்கிடமாக உள்ளது என்று தெரிவித்தார்.

காலை9.50மணியில்இருந்து மூற்பகல்11.30வரை ஜனாதிபதி உரையாற்றினார். (வ)

## இருபாலை மக்களுக்கு இரண்டாயிரம் ரூபா

(இருபாலை)

அண்மைக்கால அனர்த்தம் காரணமாக இருபாலைப் பகுதியில் ஜே/257, ஜே/258, ஜே/260 கிராமசேவகர் பிரிவுகளில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு முதற் கட்டக் கொடுப்பனவாக இரண்டாயிரம் ரூபா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பி. அச்சுவேலி அமைப்பாளர் ரவி கட்சியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவோடு தொடர்பு கொண்டதை அடுத்து இம் முடிவு எடுக்கப்பட்டதாகவும் இதற்குரிய பதிவுகளை தத்தமது கிராம உத்தியோகத்தர்களிடம் மேற்கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ந-2)

## கூட்டணியின் பொலிட்பீரோ 7ந் திகதி

உத்தேச அரசியல் தீர்வுத் திட்டத்தை ஆதரிப்பதா, இல்லையா என்ற முடிவை எடுப்பதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொலிட் பீரோ எதிர்வரும் 7ஆம் திகதி கூடவுள்ளதாக கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கு வசதியாக யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள மாவை சேனாதிராசா விரைவில் கொழும்பு செல்லவுள்ளார், [ந]

## விபத்தில்படுகாயம்

சாவகச்சேரியில் இருந்து இடம் பெயர்ந்து இருநெல்வேலிப்பகுதியில் வசித்துவந்த வயோதிபர் ஒருவர்இராணுவ மோட்டார் சைக்கிள் விபத்தில் தலையில் படுகாயம் அடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் அனுதிக்கப்பட்டுள்ளாரி.

என். கணபதிப்பிள்ளை என்பவரே படுகாயங்களுக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவராவார். (ந-12)

## ஆக. 8 கறுப்புதினமாக அனுஷ்டியுங்கள் புத்தபிக்குகள்சிங்களமக்களிடம்கோரிக்கை

(கொழும்பு)

அரசியல் அமைப்பு சீர்திருத்த சட்ட மூலம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் போதுஎதிர்வரும்8 ஆம் திகதியை ''கறுப்பு'' தினமாக அனுஷ்டிக்குமாறு பௌத்த மகாசங்கம் சிங்கள மக்களை கேட்டுள்ளது.

இதேவேளை பௌத்த சங்க பீடாதிபதிகளை, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த லொக்கு பண்டார, எம். பி, கட்சியின் தவிசாளர் கரு ஜெயசூரியா ஆகியோர் சந்தித்து அரசின் உத்தேச அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக பேசியுள்ளனர்.

இப்பேச்சுக்களின் போது மகாசங்கத்தினர் அரசியல் அமைப்பு சீர் திருத்த சட்டமூலத்தினல்சிங்களமக்களுக்கு ஏற்படும் பாதிப்பை எடுத்துக்கூறி சட்டமூலத்தை எதிர்த்து வாக்களிக்குமாறும் கேட்டுக்கொண்டனர். (வ)

## உத்தேச...

கொண்டனர், ஊர்வலம் 10-30 மணிக்கு முடிந்தது.

இதேவேளை அரசியல் அமைப்பு சீர்திருத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து பாராளுமன்றத்திற்கு அருகாமையில் உள்ள பத்தரமுல்ல சுற்று

## பாராளுமன்றில்......

கூடிய செயலாக இருக்க முடியுமா?

அதிகாரத்தைப் பரவலாக்குவதன் மூலம் இனப்பிரச்சினைத் தீர்வுகாண்பது தான்

## சந்தேகநபர் விளக்க மறியலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகநபரை தொடர்ந்தும் விளக்க மறிய

சந்தேகத்துக்கிடமாக உள்ளது என்று தெரிவித்தார்.

காலை9.50மணியில்இருந்து மூற்பகல் 11.30வரை ஜனாதிபதி உரையாற்றினார். (வ)


# கஜன்

திரை

ஊர்காவற்றுறை

விஜய் - ஷாலினி
மற்றும் பலர்
நடித்த

## காதலுக்கு மரியாதை

காட்சி நேரம்
பி.ப 3.30 மணி
(கி/652)


கொண்டனர், ஊர்வலம் 10-30 மணிக்கு முடிந்தது.

இதேவேளை அரசியல் அமைப்பு சீர்திருத்தத்ற்கு ஆதரவு தெரிவித்து பாராளு மன்றத்திற்கு அருகாமையில் உள்ள பத்தரமுல்ல சுற்று வட்டத்தில் காலை 9-30 மணி முதல் 11-30 மணி வரை ஊர்வலம் நடைபெற்றது.

கோட்டை மாநகர மேயர் சந்திரானந்தாவின் தலைமையில் நடைபெற்ற இவ் ஊர்வலத்தில் சுமார் 500 க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இரு ஆர்ப்பாட்ட ஊர்வலங்களிலும் ஆதரவு கோஷங்களும் எதிர்ப்புக்கோஷங்களும் எழுப்பப்பட்டன. இதனை ஒட்டி ஆர்ப்பாட்ட ஊர்வலப்பகுதி பலத்த பாதுகாப்புக்குட்படுத்தப்பட்டு மேலதிக பொலிசாரும் கலகம் அடக்கும் படையினரும் அமர்த்தப்பட்டிருந்தனர். (வ)

வைத்திய சாலையில் அனுதிக்கப்பட்டுள்ளார்.

என். கணபதிப்பிள்ளை என்பவரே படுகாயங்களுக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவராவார். (ந-12)

## தாதிகள் தெரிவுப் பரீட்சை 20-ந் திகதி

பயிலுநர் தாதிகளை சேர்த்துக் கொள்வதற்காக நடைபெறவிருந்த போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

நாளை மறுதினம் நடைபெற இருந்த இப்பரீட்சை இம்மாதம் 20 ஆம் திகதி நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ந-2)

## 'சிற்றிஒவ் றிங்கோ'...

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திற்கும் வடமாகாண புனர்வாழ்வு அமைச்சருக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் இச்சேவை நடைபெறுகின்றது.

சிற்றிஒவ் றிங்கோ பயணிகள்கப்பல் இதுவரை 8சேவைகளை கடற்படையின் வழித்துணையுடன் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

செவ்வாய்க்கிழமை வரவிருக்கும் பயணிகள் கப்பலில் சுமார் 350 பயணிகள் பருத்தித்துறைக்கு வருவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## பாராளுமன்றில்......

கூடிய செயலாக இருக்க முடியுமா?

அதிகாரத்தைப் பரவலாக்குவதன் மூலம் இனப்பிரச்சினைத் தீர்வுகாண்பது தான் புதியஅரசியல் திருத்தச் சட்ட மூலத்தின் நோக்கமாகும்.

தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள புதிய அரசியல் யாப்பின் பிரகாரம் இந் நாட்டை ஒருபோதும் பிரிக்கமுடியாது. அத்தகைய பிரிவினை ஒன்றுக்கு நானோ, எனது அரசாங்கமோ ஒரு போதும்உடந்தையாக இருக்காது.

புதிய அரசியல் யாப்பினை நிறைவேற்றுவது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் பொறுப்பாகும். அரசியல் அமைப்புச் சீர்திருத்தச் சட்ட மூலத்திற்கு அவர்கள் நமது மனச் சாட்சிக்கு ஏற்றவிதமாக வாக்களிப்பார்கள் என தான் நம்புகின்றேன் என்றும் ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களான றொனி டி மெல், சுசில் முனசிங்கா, ஆரியபால வைத்தியகம ஆகியோர் அரசியல் கட்சியினரின் ஆசனங்களில் அமர்ந்திருந்தனர்.

அரசியல்அமைப்பு தொடர்பான விவாதம் 7ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி மூன்று தினங்கள் விவாதம் நடந்தபின் 9 ஆம் திகதி புதன்கிழமை வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது. [வ[

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகநபரை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். மாவட்ட மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.


# ஸ்ரீசெல்வா

[யாழ்ப்பாணம்]

சிவாஜி - ஜெயலலிதா
நடித்த

## எங்கிருந்தோ வந்தாள்

[வெள்ளி மட்டும்]

சனிக்கிழமை
கார்த்திக்-கௌசல்யா
நடித்த

## குபேரன்

10-30, 2-00 (ப.நே)
[இ 688]



# உடன் தொடர்பு கொள்ளவும்

மீசாலை, சாவகச்சேரி வடக்கு பங்களா வீதியைச் சேர்ந்த ந. நகுலேந்திரன் என்பவர் உடனடியாக என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

செல்லையா விஜயரட்ணம் (ச. நீ.)
(யாழ்: மாநகராட்சிமன்ற உறுப்பினர்)

1618)



இப்பத்திரிகை "வலம்புரி" அச் சோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம், எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.